

'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

**27–1–1979**

டி. கே. ஷண்முகம்

ஸ்ரீ பால ஷண்முகானந்த சபா.

271

# உலக அரங்கு

நாடகக் கதைகள்

A
271
178

மதுரை காமராசர் பல்கலை...
அன்பளிப்பு
தி.க. சண்முகம் நூலகம்

தமிழில் தருபவர்

"புதுமைப்பித்தன்"

மதுரை காமராசர் பல்கலை...
அன்பளிப்பு
தி.க. சண்முகம் நூலகம்

★

ஸ்டார் பிரசுரம்

பாலக்கரை, திருச்சிறுப்பள்ளி

**No. 44 Short Stories from European Dramas:**

## SHAKESPEARE-MOLIER-IBSEN

COPYRIGHT

*FIRST EDITION-MARCH 1947*

**Price Rs. 1-8-0**

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 392
நன்கொடை எண்: 392

★

STAR PUBLICATIONS
PALAKARAI, TRICHINOPOLY

PRINTED AT THE CITY PRESS, TRICHINOPOLY
FOR STAR PUBLICATIONS-P. I. C. TY. 9(A)-1000-COPIES

# பதிப்புரை

புதுமைப்பித்தன், 'மணிக்கொடி'யிலிருந்து வெளிவந்த மாணிக்கம். அவருடைய எழுத்திலே, புதுமைப் பித்தும், கற்பனு சிருஷ்டி ஜாலமும் பின்னி மின்னிப் புரளுவதைக் காணும்போது, நமது நெஞ்சில் இலக்கிய இன்பம், கலையாவேசத்துடன் துள்ளி விளையாடுகிறதல்லவா?

ஆங்கில நாடகங்கள் மூன்று, பிரெஞ்சு நாடகம் ஒன்று, நார்வே நாடகம் ஒன்று—, ஆக ஐந்து நாடகங்களையும், தமிழில் ஐந்து ஒப்பற்ற கதைகளாக நமது நண்பர் ஓவிய நடையில் சிருஷ்டித்திருக்கிருர்: அவருடைய எழுதுகோல் சுழலும் போது, நமது இதயமே சுழல்கிறது. இதைத்தானே இலக்கிய வெற்றி என்கிருர்கள்!

ஐந்து நாடகங்களும், ஐந்தருவிகளாக, மனிதப் பண்பெனும் மகா சமுத்திரத்தில் சங்கமமாகி, பேரொலிக்குப்பின் சாந்தியடைகின்றன.

21–3–1947
ஸ்டார் பிரசுரம்
திருச்சி

வி. ஆர். எம். செட்டியார்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| டைமன் கண்ட உண்மை | -ஷேக்ஸ்பியர் | 1 |
| ஆஷாட பூதி | -மோலியர் | 19 |
| மணிமந்திரத் தீவு | -ஷேக்ஸ்பியர் | 26 |
| தர்மதேவதையின் துரும்பு | -ஷேக்ஸ்பியர் | 46 |
| ராஜ்ய உபாதை | -ஹென்றிக் இப்ஸன் | 72 |

# ஷேக்ஸ்பியர் : 1564—1616

இங்கிலீஷ் நாடகாசிரியர் ஷேக்ஸ்பீயரை துவிதப் பிரம்மா என்பார்கள். உலகத்தின் சிருஷ்டி தத்துவம் புரிந்து கொண்டவன்போல் தமது பாத்திரங்களை நடமாட விடுவார். அவர் உலகில் பேய்களும் உண்டு; சாணக்கியர்கள், வீரர்கள், கொலைகாரர்கள், முட்டாள்கள், தேவதைகள், வெறியர்கள் யாவரும் உண்டு. அவர் உலகத்தில் முடிவில் தர்மத்துக்கே வெற்றி.

ஷேக்ஸ்பியர் 1564-ல் வார்விக்ஷயரில் உள்ள ஸ்டாபோர்ட்-ஆன்-அவான் (அவான் நதிக்கரையில் உள்ள ஸ்டாபோர்ட்) என்ற ஊரில் செயலுள்ள குடும்பத்தில் பிறந்தார். 1616 வருஷம் அந்த ஸ்டாபோர்ட் ஆன் அவானிலேயே செயலுள்ள பிரபலஸ்தராக உயிர் துறந்தார். சிறுபோதில் அவரது குடும்பம் நொடிந்து விட்டது. அவர் மணவினை சொத்தை கொண்டுவந்தாலும் மகிழ்ச்சியைக் கொண்டுவரவில்லை. அத்துமீறி ஒரு காட்டில் மான்வேட்டையாடியதாலோ மற்றெந்தக் காரணத்தினாலோ ஊரைவிட்டு வெளியேறும்படி நேர்ந்தது.

லண்டனில் முதலில் பழைய நாடகங்களை திருத்திக் கொடுப்பவனாகவும், நடிகனாகவும், நாடகாசிரியனாகவும், பிறகு நாடக இலக்கியத்தின் சாம்ராட்டாகவும் பெரும் புகழும் பணமும் சம்பாதித்தார். பிறகு அந்திம காலத்தை சுகவாசியாக கழிக்க, பிறந்தவூர் திரும்பினார்.

கைப்பழக்கம் முதிர்ந்து உலகின் ஆழ்ந்த புதிர்களை எடுத்து நாடகங்களாக அமைத்த காலத்தில் பிறந்த நாடகங்கள் கீழே தந்திருக்கும் மூன்றும்: 'டெம்பஸ்ட்' என்ற நாடகத்தில் அவர் பிராஸ்பிரோவாக வந்து உலக நாடக மேடையில் பிரியா விடைபெற்றுக்கொள்ளுகிறார் என்று சொல்லுவார்கள்.

## மூன்று நாடகங்கள் :


டைமன் கண்ட உண்மை (*Timon of Athens*) பக்கம் 1-16
மணிமந்திரத் தீவு (*The Tempest*) „ 26-45
தருமதேவதையின் துரும்பு (*Hamlet*) „ 46-70

விரைவில் வெளிவரும்:

# பளிங்குச் சிலை

கதைகள்

"புதுமைப்பித்தன்"

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.சு. சண்முகம் நூலகம்.

# டைமன் கண்ட உண்மை

---

[டைமன் : ஏதென்ஸ் நகரத்துக் குபேரன்

பிளேவியஸ் : யோக்யமான வேலைக்காரன்

அல்கிப்யாடிஸ் : உண்மையான வாஞ்சையுள்ள சேனாதிபதி

அப்பெமென்டாஸ் : லோகத்தை திட்டும் சித்தாந்தி

அயோக்ய நண்பர்கள், கவிராயர்கள், கடன்காரர்கள், செனட் சபையினர் முதலியோரும் வந்துபோவார்கள்.]

# பணக்கார டைமன்

டைமன் குபேர சம்பத்துடையவன்; கிரேக்க நாகரிகத்தின் நாற்றங்கால் என்று சொல்லவேண்டிய ஏதன்ஸ் நகரத்தின் பிரதான பிரஜை. உலகத்தின் சௌபாக்கியங்கள் யாவும் அவன் காலடியில் கிடந்தன. பணம் இருந்தால் மட்டும் போதுமா. தாராளமாக இரு கைகளாலும் வாரி வழங்கும் மனசும் இருந்தது.

அவன் மாளிகையிலே நண்பர்களுக்கு ஓயாத விருந்து. எடுத்த வார்த்தைக்கெல்லாம் பரிசு. அவனுடைய ஜீவியமே பெருங் களியாட்டமாக இருந்தது.

ஏதன்ஸ் நகரத்தின் குடியாட்சியில் அவனுக்கு சொல் சக்தி உண்டு; ஏனென்றால் நகரத்துச் சேனையில் தலைமை வகித்துப் போர் புரிந்து பவித்திரமான வடுக்கள் பெற்றவன்.

டைமனை, ஏதன்ஸ் நகரத்தின் அதிர்ஷ்ட தேவதை என்றே சொல்லவேண்டும். அவன் வீட்டில், "ஐயோ" என்று வருகிறவன் மனம் ஒடிந்து திரும்பமாட்டான். பாட்டுக்கட்டிவரும் கவிராயரும் வர்ணப்படம் தீட்டிவரும் ஓவியக்காரரும் பட்டிலியோடு திரும்பியதில்லை. நகை

வியாபாரிகளுக்கு அவர் முற்றத்தில் கொள்ளை லாபம்.

டைமன் அவ்வூரில் மூன்றுபேரைத் தன் உயிருக்குயிரான நண்பர்களாக மதித்திருந்தான். அவன் வீட்டுக்கு அவர்கள் விருந்தாடி வந்து பரிசில் பெற்றுப் போகாத நாள் கிடையாது. ஆனால் அவர்கள் அவனைப் பணம் காய்ச்சி மரம் என்று நினைத்திருந்தார்கள். அவன் புன்சிரிப்பின் தன்மையிலே தளிர்த்தார்கள்.

டைமன், வாரி வழங்கும் துருதுருப்புக் கொண்டவனுதலால், இரண்டு கைகளாலும் கடன் வாங்கி வந்தான். வென்டிட்டஸ் என்ற நண்பன் ஒருவன் கடன்காரன் கையில் சிக்கிக் கொண்டானு; உடனே அவனை மீட்க டைமனின் பணம் விரைகிறது. ஒரு ஏழைக் கிழவன்; அவனுக்கு ஒரு மகள். அவளை டைமனுடைய வேலைக்காரன் காதலிக்கிறான். கிழவனுக்கோ, தட்டுத் தூக்குகிறவன் தன் மகளைக் கலியாணம் செய்துகொள்வதா என்பது. இந்தச் செய்தி காதில் விழுந்ததும் அந்த இரண்டு இளம் ஜீவன்களும் சுகமாக இருக்க, வேண்டிய பணத்தை வேலைக்காரனுக்குக் கொடுத்து, அவனை அடிமைத் தளையிலிருந்து விடுவித்து, கல்யாணமும் செய்துவைக்கிறான்.

டைமனுக்கு வாழ்விலே கஷ்டம் தெரியவில்லை. பணத்தின் சிக்கல்கள், மனித குணத்தின்

ஆழம்,—இவற்றை அறிந்துகொள்ள அவகாசம் இல்லை; அப்படி பெரியதொரு கேளிக்கையாக இருந்தது அவர் வாழ்வு. ஆனால் அவனுடைய கொடுக்கல் வாங்கல் விவகாரங்கள், அவனது ஆசைகள் ஓடும் திசையில் போக்கு அறிந்து அவற்றை நடத்திவைப்பது அவனுடைய மாளிகைக் கணக்கப்பிள்ளையான பிளாவியஸ். அவன் யோக்யன்; டைமனின் சிறுபிள்ளைத்தனமான விளையாட்டின் விபரீதம் எங்கு வந்து விடியும் என்பதை உணர்ந்தவன்; எஜமான்பேரில் மாறாத பாசம் வைத்த பணியாளன்.

ஏதன்ஸ் நகரத்தைக் காப்பதற்காக, முன்பு டைமன்ஸ் தலைமையில் நடைபெற்ற போரில், துணையாக நின்ற அல்க்கிப்யாடிஸ் என்றசேனாதிபதிக்கு உண்மையான நட்பும் விசுவாசமும் உண்டு. அவன் இப்போது ஏதன்ஸ் நகர குடியாட்சியின் ஸ்தானாதிபதி.

ஆனால் நகரக் குடியாட்சியோ உளுத்துப் போனதொரு செனேட் சபையின் நிர்வாகத்தின் கீழ் சிக்கிக் கிடந்தது. சபை அங்கத்தினரோ உடலும் நெஞ்சும் வரண்ட பேர்வழிகள், பணத்தை குட்டிபோட விட்டுப் பெருக்குவதிலேயே பொழுதையும் வயதையும் கழிப்பவர்கள். இவர்களுக்கு டைமன் என்றால் பிடிக்காது. 'கெவுருதை' பிடித்த பயல், படாடோபக்காரன் என்று வெறுப்பவர்கள். டைமனுடைய கிரகம்

உச்சத்திலிருக்கும்வரை அவனை இவர்களது வெறுப்புத் தீண்டுவதற்கு திராணியற்று முடங்கிக் கிடந்தது.

இந்த நகரத்தின் கோலாகல வாழ்வுக்கும் சர்கேட்டுக்கும் மாற்று மருந்துபோல ஒரு சித்தாந்தி நடமாடித் திரிந்தான். லோகத்தின் பகட்டு, படாடோபம், நம்பிக்கை மோசடி இவற்றை குத்திக் குத்திக் காண்பிக்கும் சுபாவம் உள்ளவன். அழையா விருந்தினனாக எல்லா இடங்களிலும் நுழைவான், திட்டுவான், தூற்றுவான். மனிதர்கள் என்றால், சகல துற்குணங்களுக்கும் தாயகமான "கெட்ட ஜாதி" பிராணி என்று நினைப்பவன். வலியப் போய் ஒருவன் முன்னால் உட்கார்ந்துகொண்டு அவனை வாய்க்கு வந்தபடி திட்டுவான். ஏதன்ஸ் வாசிகள் தங்களுக்குப் பொழுது போகாவிட்டால், இவனது திட்டுகளை உல்லாசமாக ரசிப்பார்கள். இவன் பெயர் அப்பெமென்டாஸ். இவனுக்கு ஒரு சீடன் உண்டு. அவன் பெயர் முட்டாள்.

## கடைசி விருந்து

செல்வம் என்பது என்ன வற்றாத ஊற்றா. டைமனுக்கும் பணமுடை என்ன என்பது தெரியும் சமயம் வந்தது. ஒருநாள் வேட்டையாடி விட்டு உத்சாகமாக விருந்துக்குத் திரும்புகிறான் டைமன். கடன்காரர்களுடைய வேலைக்

காரர்கள் பணத்துக்கு அவனிடம் நேரில் இடை மறித்துக் கேட்கிருர்கள். சிறிது மண் கரைந் தால் போதுமல்லவா? கரை உடைத்துக் கொண்டதுபோல் நாலா திசையிலும் கடன் காரர்கள் பிச்சுப் பிடுங்குகிருர்கள். கணக்குப் பிள்ளை பிளேனியஸ் எத்தனையோ நாள் சால் ஜாப்புச் சொல்லிப் பார்த்தான். கடன்காரர்கள் எத்தனை நாட்கள்தான் பொறுத்திருப்பார்கள். டைமனே "கொடு கொடு" என்பதைத் தவிர கணக்குப் பார்க்க உட்காரவில்லை.

டைமனுக்கு உட்கார்ந்து கணக்கைப் பார்த் ததும் பயமாகத்தானிருந்தது. இத்தனை நாள் ஏன் சொல்லவில்லை என்று கோபிக்கிருன். சொல்லுவதற்கு வாயெடுக்க விட்டால்தானே. பணத்தைத் திருப்பிக் கொடுப்பதில் என்ன பிர மாதம். உயிர்த்தோழர்களுக்கும், உதவி பெற்ற வர்களுக்கும் ஆள் அனுப்புகிருன். அவர்களுக்கு என்ன பைத்தியமா. "இப்பொழுதில்லையே." "ஒரு மணி நேரத்துக்கு முன் வந்திருக்கக் கூடாதா." "என் பணம் வேறு ஒரு இடத்தில் சிக்கிக் கிடக்கிறதே." "ஐயோ பாவம் டைம னுக்கா இப்படி வரவேணும்" என்று சொல்லி அனுப்பிவிடுகிருர்கள்.

"இத்தனை நாள் வெறும் அந்தரத்தில் அல்லவா நடமாடிக்கொண்டிருந்தோம்." "தடு மாறிய காலுக்கு தாங்கல் இல்லை" என்ற உண்மை டைமனை நிலைகுலையச் செய்கிறது.

அவனுடைய சித்தம் கலங்கி விடுகிறது. ஒரே நாளில் பிச்சைக்காரனாகி, இத்தனை நாள் கூடிக் குலாவியவர்கள் ஏறெடுத்தும் பார்க்காமல் போனால் யாருக்குத்தான் மூளை கலங்கி விடாது. மனம் கைத்துப்போய் நண்பர்களை மறுபடியும் விருந்துக்கு அழைக்கும்படி பிளேவியஸுக்கு உத்தரவு போடுகிறான்.

எஜமானுடைய கோபத்தை சமாளித்துக் கொண்டு வந்த கணக்குப் பிள்ளைக்கு இன்னுமா வெறித்தனம் என்று படுகிறது.

"போ. போய் அழைத்துக்கொண்டுவா" என்று கர்ஜிக்கும்போது என்ன செய்ய முடியும்.

அழைப்பைக் கண்ட நண்பர்கள், டைமன் அடியோடு அழிந்துவிடவில்லை என்று நினைக்கிறார்கள். அவனுடைய மனசு கள்ளங் கபடு அற்றது. பிறரை சந்தேகிக்காதது என்பது அவர்களுக்குத் தெரியும். பஞ்சப்பாட்டுப் பாடி இன்னும் கிடைக்கிறதைத் தட்டிக்கொண்டு போகலாம் என்று நினைக்கிறார்கள். ருசிகண்ட பூனைகள் அல்லவா.

டைமன் மாளிகைக்கு ஒவ்வொருவராக வந்து பழய கும்பல் கூடுகிறது. அதிதிகளுக்கு மூடியிட்ட பாத்திரங்களில் பறிமாறப்பட்டிருக்கிறது. நம்மை பிரமிக்க வைத்து மகிழ வைக்க புது தினுசான பரிசில் வந்திருக்கும் என்று மனப் பால் குடிக்கிறது இந்த சீலைப்பேன் கும்பல்.

"தகுதிக்குத் தகுந்தபடி விருந்து." கொடுக்கிற விருந்தை ரசியுங்கள்; கொடுக்கிறவனை நினைக்க வேண்டாம்! இருபதுபேர் கூடினல், இருபதுபேரில் யோக்கியர்களே இருக்கக் கூடாது; லோகம் அப்படி. அழைப்புபற்றி எனக்குக் கவலையில்லை; பாத்திரத்தைத் திறந்து நக்குங்களடா. நாய்களா" என்கிருன் டைமன். பாத்திரத்தில் மூடி வைத்திருந்தது வெறும் வென்னீர்தான்.

வென்னீரை இந்த அயோக்கிய கும்பல்மேல் ஊற்றி அடித்துத் துறத்தி விடுகிருன் டைமன்.

இதற்கிடையே, அல்கிப்யாடிஸ், தன்னுடைய நன்பனுக்காக செனேட் சபையில் பரிந்து பேசுகிருன்; வரட்டுக் கிழங்கள் அவனையும் நாடு கடத்தி விடுகின்றன. டைமன்மீதும் கடுந்தண்டனை விதிக்கப்போவதாக கொக்கரிப்பு. அதற்காக அவன் காத்திருந்தால்தானே. மனிதர்களுள் கூடி வாழ்வதைவிட மிருகங்களிடை காட்டில் திரிவது நல்லது என்று நாகரிகத்தின் பகட்டை பசையற்ற தன்மையை வைதுகொண்டே போய் விடுகிருன்.

## மிஸ் ஆந்த்ரபாஸ்

சித்தம் கலங்கி காட்டில் மனம்போனபடி நடமாடித் திரிகிருன் டைமன். அவன் உள்ளம் அக்னியாகக் கொதிக்கிறது. லோகமானது

அன்பு, பாசம் என்பவை சற்றும் தளிர்விட முடியாத சுடுகாடாகத் தோன்றுகிறது அவனுக்கு. மிஸ் ஆந்த்ரபாஸ் என்று தனக்கு பெயர் ஒன்று வைத்துக்கொண்டு உலகத்தையும் அதன் அயோக்கியத் தன்மைகளையுமே திட்டுபவனாக காலத்தைக் கழிக்கிறான். வெறிகொண்ட மனசுக்கு குழிதோண்டும் குணம் ஒன்று ஏற்பட்டு விடுகிறது.

இவன் இவ்வாறு தோண்டிக் கொண்டிருக்கையில் ஒரு புதையல் கிடைக்கிறது. மனம் கலங்கிய டைமனுக்கு தங்கத்தின் உபயோகம் புதுமாதிரியாகப்படுகிறது. உலகத்தை அழிக்க, அதை நாசம் செய்ய உபயோகப்படுத்த வேண்டும்.

கடற்கரையருகிலே உள்ள குகை ஒன்றில் டைமன் குடியிருக்கிறான். இந்தச் சமயத்தில் அல்கிப்யாடிஸ் தன்னுடைய சைன்னியத்துடனும், வைப்பாட்டிகள் இருவருடனும் அங்கு வருகிறான். டைமன் மனசுக்கு ஆறுதல் சொல்லி அழைத்துப் போகவேண்டும் என்ற ஆசை. டைமனைக் கொடுமைப்படுத்திய ஏதன்ஸ் நகரத்தின்மேல் படை எடுத்துச் சென்று அதை அடக்கவேண்டும் என்று விரும்புகிறான்.

ஆனால் டைமனுடைய மனம் அடியோடு சிதைந்துவிட்டது. அல்கிப்யாடிஸையும் அவனுடன் வந்த இரு பெண்களையும் வாய்க்கு வந்தபடி

வைகிறன். ஈவு இரக்கம் காட்டாமல், ஏதென்ஸ் வாசிகளை கிழம், குஞ்சு, பெண் என்ற பேதம் பாராமல் கொல்லு என்று கூவுகிறன். லோகத்தில் நோயைப் பரப்பும்படி, பெண்களுக்கு புத்தி சொல்லி, கண்டெடுத்த பொன்னை கொடுக்கிறன்.

இவன் போன பிறகு அப்பெமென்டாஸ் வருகிறர். 'யாரடா என் வேஷத்தைப் போட்டுக் கொண்டு உலகத்தைத் தூற்றுகிறவன்?' என்று கோபிக்கிறன். இரண்டுபேரும் மனமார வாயார வைதுகொள்கிறர்கள். "உன்மேல் ஒரு கல்லெடுத்து அடித்தால், கல் நஷ்டம்" என்கிறன் டைமன்.

"அடே உன்னை ஏமாற்றினவனைப்போல் வேஷம்போட்டு அவனை ஏமாற்று; அதுதான் லோக சம்பிரதாயம்" என்கிறன் அப்பெமென் டாஸ்.

"நாயே," "பேயே" என்று திட்டிக்கொள்ளுகிறர்கள்.

"நீடூழி வாழ்ந்து உன் கசப்பைக் கட்டிக் கொண்டு அழு" என்று ஆசீர்வதிக்கிறன் அப்பெமென்டாஸ்.

"நீடூழி வாழ்ந்து பிறகு செத்துத் தொலை" என்று மறு ஆசீர்வாதம் கொடுக்கிறன் டைமன்.

டைமனிடம் இன்னும் பணம் இருக்கிறது என்ற ரகசியம் எப்படியோ பரவிவிடுகிறது. அவனிடம் கொள்ளையடிக்கலாம் என்று சில திருடர்கள் வருகிறார்கள். அவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக, அவர்களுக்கு பணத்தைக் கொடுத்து லோகத்தைக் கொள்ளையடிக்கும்படி சொல்லியனுப்புகிறான். "லோகமே ஒரு பெரும் திருட்டு; சந்திரன், சூரியனிடமிருந்து வெளிச்சத்தைத் திருடுகிறது; சூரியனும் திருடன் கடலிலிருந்து தண்ணீரைத் திருடுகிறான்; உலகமும் திருடுகிறது. உங்களைப் பிடித்துக் கட்டும் சட்டம்; அதுவும் திருடுகிறது! இதோ இன்னும் பொன் இருக்கிறது; எடுத்துக்கொண்டுபோய் இன்னும் கொள்ளையடியுங்கள்" என்று அனுப்புகிறான்.

டைமன் பித்தம் பிடித்து புறப்பட்டுவிட்டதைக் கண்டு மனம் நொந்துபோன பிளேவியஸ் இவனைத் தேடிக்கொண்டு கடைசியாக இந்தக் குகைக்கு வந்து சேருகிறான்.

கோலாகலமாக வாழ்ந்து வந்த டைமன் இருக்கும் நிலை கண்டதும் அவனது நெஞ்சம் வெதும்புகிறது. தன்னிடம் பணம் இருக்கிறது; இன்னும் பழயபடி அவரிடம் பணியாளாக வேலைபார்க்க விரும்புவதாகச் சொல்லுகிறான்.

"லோகத்திலுள்ள தனி யோக்கியனே, இதோ என்னிடம் கொஞ்சம் பணம் இருக்கிறது; அதை எத்துக்கொண்டுபோய்ச் சேர்; மனுஷன்

மூஞ்சியைப் பார்க்க எனக்குப் பிடிக்கவில்லை; நாயைப் பட்சமாக பார்த்துக்கொள்; மனுஷனுக்குக் கொடுக்காதே'' என்று பதில் கொடுக்கிருன் டைமன்.

'வேறு ஒன்றும் வேண்டாம்,' உமது பக்கத்திலிருந்து ஆறுதல் சொல்ல அனுமதி கொடுங்கள்' என்று கெஞ்சுகிருன் பிளேவியஸ்.

"சாபத்துக்கு பயம் இருக்குமானுல் இங்கே இருந்து ஓடிப்போ. இந்தப் பக்கம் தலைகாட்டாதே'' என்று சொல்லிவிடுகிருன்.

டைமனிடம் பணம் இருக்கிறதென்ற சேதி ஏதன்ஸ் நகருக்குள்ளும் பரவிவிடுகிறது. கவிராயரும், படம்போடுகிறவனும் இவனைத்தேடிக் கொண்டு வருகிருர்கள். கூழைக்கும்பிடு போட்டு, வாயாரப் புகழ்கிருர்கள். கவிராயர் தம் கற்பனைச் சரடுகளை எல்லாம் அள்ளி வீசுகிருர். கொஞ்சநேரம் இவர்களை நையாண்டி செய்துவிட்டு "சில அயோக்கியர்கள் இருக்கிருர்கள்; அவர்களைப் போக்கிவிட்டால் உங்களுக்குப் பொன் தருகிறேன்'' என்கிருன் டைமன்.

"சொல்லுங்கள், நிமிஷத்தில் தீர்த்துவிட்டு மறுவேலை பார்க்கிறேம்'' என்று ஆரவாரம் செய்கிறது இந்தக் கற்பனைக் கும்பல்.

"நீங்கள்தானடா அந்த அயோக்கியர்கள்'' என்று அவர்களை உதைத்து விரட்டிவிடுகிருன்.

இந்த நிலையில் அல்கிப்யாடிஸின் சைன்யம் ஏதன்ஸ் நகரை நெருங்குகிறது. பீதியடித்துப் போன செனட் சபைக்கு டைமன் ஞாபகம் வரு கிறது. அவன் காலடியில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டு அவனை அழைத்துவந்து, அவ னது வீரத்தை உபயோகித்து தன்னைக் காப்பாற் றிக்கொள்ள முயலுகிறது.

மன்னிப்புக் கேட்டுக்கொண்டு சமாதானம் செய்து, டைமனை அழைத்துப்போவதற்காக, ஏதன்ஸிலிருந்து இரண்டு செனட்டர்கள் வருகி ருர்கள். பிளேவியஸ், அவர்களை அழைத்துக் கொண்டு வருகிருன்; ஆனுல் எச்சரிக்கிருன், டைமன் யாரையும் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை என்று.

இருந்தாலும் ஆசை யாரை விட்டது; அது வும் அபாயம், பின்புறம் நின்று துரத்தும் போது.

குகைக்கு வெளியே வந்து நின்றுகொண்டு பெயர்சொல்லி அழைக்கிருர்கள்.

“அடே நாசமாய்ப் போக; நாக்குப் புழுத் துப்போக” என்று ஏசிக்கொண்டே வெளியே வருகிருன்.

ஏதன்ஸ் நகரத்தின் சார்பாக மன்னிப்புக் கேட்கிருர்கள். அல்கிப்யாடிஸின் சீற்றத்தைத் தடுக்க தாங்களே வந்து தலைமைபூண்டு சேனை

யை நடத்திச் செல்லவேண்டும் என்று கோருகி ருர்கள்.

அல்கிப்யாடிஸிடம் இதைச் சொல்லுங்கள்: அவன் எப்படிக் கொலை செய்து குடலைப் பிடுங்கி எறிந்தாலும் டைமனுக்குக் கவலையில்லை. கிழ வர்களை, கன்னிகளை, வாலிபர்களை கொன்று யுத்தம் என்ற யாக குண்டத்தில் போடட்டும், டைமனுக்கு கவலையில்லை. பணக்காரக் கடவுள் கள் எங்களைக் காப்பாற்றும்; திருடர்கள், பணக் காரர்களைக் காப்பாற்றுவதைப்போல" என்று சொல்லுகிருன் டைமன்.

"அவரிடம் பேசிப் பிரயோஜனமில்லை; திரும்பிப் போங்கள்" என்று சொல்லுகிருன் பிளேவியஸ்.

"ஏதென்ஸ் நாசமாகப் போகிறதென்ருல் வருத்தமாகத்தானிருக்கிறது. எப்படியிருந்தா லும் தாய்நாடு அல்லவா" என்று ஆரம்பிக்கிருன் டைமன்.

செனட்டர்களுக்கு நம்பிக்கை பிறக்கிறது.

"பிரபுவே" என்று வாயார வாழ்த்துகி ருர்கள்.

"ஏதென்ஸ் நகரவாசிகளிடம் இதைப் போய்ச் சொல்லுங்கள். இங்கே ஒரு பெரிய

மரம் ஒன்று தளதளப்பாக வளர்ந்திருக்கிறது. அதை என்னுடைய உபயோகத்துக்காக வெட்டி விடலாம் என்றிருக்கிறேன். ஏதென்ஸ்வாசிகள் எல்லாரும், அவகாசத்தை நழுவவிடாமல் சீக்கிரம் வந்து அந்த மரத்தில் தூக்குப்போட்டுக் கொள்ளட்டும்; பிறகு மரம் இருக்காது" என்று கிண்டல் செய்கிறான் டைமன்.

"அவரிடம் பேசிப் பயனில்லை; அவர் இப்படியேதான் சொல்லிக்கொண்டிருப்பார்' என்கிறான் பிளேவியஸ்.

"டைமன் கடற்கரையருகிலே அழியாத மாளிகை கட்டிக்கொண்டான்; கடல் அலைகள் அந்த மாளிகையை தினசரி குளிப்பாட்டும்; என்னுடைய கல்லறை குத்துக்கள், கைத்த வார்த்தைகளில் நோய்க்கும் போருக்கும் மிஞ்சுகிறவர்களை சபிக்கும் என்று ஏதென்ஸுக்கு சொல்லுங்கள். டைமன் ஆட்சி முடிந்தது."

அல்கிப்யாடிஸ் ஏதென்ஸ் நகரத்து மதில்களை எட்டிவிட்டான். தொடை நடுங்கித் தலைவர்கள், சரணாகதி செய்துவிட்டார்கள். டைமனுக்கு கொடுமை இழைத்தவர்களுக்கு அவர்கள் வகுத்த சட்டமே நியாயம் சொல்லும் என்று எச்சரிக்கிறான். எதற்கும் சம்மதிக்கிறார்கள்; யுத்தமில்லாவிட்டால் போதும்.

ஆனால் வெற்றிக்கு முந்திவிட்டான் டைமன். அவனைத் தேடிச் சென்ற சோல்ஜர்

அங்கு ஒரு கல்லறையைத்தான் பார்க்கிறான். அதிலே "இங்கு கிடக்கிறது ஒரு சடலம்; என் பெயரைக் கேட்காதே; லோகத்தில் மிஞ்சிய அயோக்கியர்கள் நாசமாய்ப்போக; உலகம் வெறுத்த டைமன் இது. ஆசை தீர சபித்து விட்டுப் போ; நிற்காதே போ."

தாராளமாக வழங்கிய கை, மண்ணாகி மக்கி சபிக்கிறது.

## மோலியர் 1622 - 1673

பதினேழாவது நூற்றாண்டில், நாடக உலகம், பிரான்ஸில், நரகத்தின் முன்கூடம். நாடகக்காரன் என்றால், மதம், அவனைத் தள்ளி வைத்தது. பிரார்த்தனை – பிரசாதத்தைப் பெறுவது என்றால் விசேஷ சிபாரிசின்பேரில் நடக்க வேண்டிய காரியம். செத்தால், வள முறைப்படி அந்திமக் கிரியைகள்கூட அனுமதிக்கப்படமாட்டா. பவித்திர நிலத்தில் (கல்லறைத் தோட்டத்தில்) அவனைப் புதைக்க அனுமதிக்கமாட்டார்கள். சாத்தானின் குழந்தை என்று அவனை தண்ணீர் தெளித்து விட்டுவிடுவார்கள். இவ்வளவும் தெரிந்திருந்தும் ஜீன்-பாப்டிஸ்டே பொக்லின் என்ற மோலியர் அந்தத் தொழிலை ஜீவனோபாயமாகக் கொண்டார். நடிகனாகவும் நாடகாசிரியனாகவும் வாழ்வைக் கழித்து, ஒரு நாடகத்தில் நடிக்கும்போது திடீரென்று நோயுற்று, சில மணி நேரங்களில் மாண்டார்.

மோலியர் பிறப்பில் பாரிஸ் வாசி. அவருடைய நாடகக் கோஷ்டி முதலில் ட்யூக் ஆப் ஆர்லியான் ஆதரவில் நாடகம் போட்டு வந்தது. யுத்தத்தின் அழைப்பு ட்யூக்கை போர்க்களத்துக்கு அனுப்பிவிட நாடகக் கம்பெனி வறுமை

யுடன் தோழமை கொண்டது. பாரிஸிலிருந்து பிரான்ஸ் முழுமையும் சுற்றி வந்தது; வறுமையில் தோழமையை உதறித்தள்ள முடியவில்லை. பாரிஸுக்கு திருப்பி வந்தபொழுது, மோலியருக்கு ராஜ ஆதரவு கிட்டியது. 'நானே பிரான்ஸ்' என்று மகா இடும்புடன் ஒருமுறை சொல்லிய பதினாலாவது லூயி 'நல்ல' ரசிகன். மோலியருடன் தோழமை கொண்டான். அந்த ஆதரவிலே தழைத்த பெரும் நாடகங்கள் பல. கடைசி மூச்சு ஓடும்வரை மோலியர் நாடகக் கலைக்கு சேவை செய்தார்.

உலகத்தில் பிரபல ஹாஸ்ய நாடக கர்த்தர்களில் இவரும் ஒருவர். இவரிடத்திலே ஷேக்ஸ்பியரின் மேதையை, கதை வளர்க்கும் திறமையை காண முடியாது. ரயிலுக்குப் போகும் அவசரத்தில், கட்டினதுபோல், வார்ப்பு இறுகியிருக்காது; உருக்குலைந்து கோணிக் கொண்டு நிற்கும். ஆனால் போலிகளை, விஷமிகளை நையாண்டி செய்வதில் அதிசமர்த்தர். அவரது சிரிப்பு சிந்தனையை கிளர்த்திவிட ஒரு வியாஜம்.

கடவுளைச் சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டால் உலகத்தின் கண்ணில் மண்ணை வாரிப் போடலாம்; திருடுவது, பொய் சொல்லு வது முதலிய கெட்ட விவகாரங்களில் தலையிடு வதைவிட வேதத்தையும் ஒழுக்கத்தையும் ஒரு வியாபாரமாக நடத்தினால், பெரும்பாலோர் மனம் உவந்து தம்மை ஏமாற்றிக்கொள்ளுவதற் காக எந்த சிரமத்தையும் பொருட்படுத்த மாட் டார்கள்; இவை எல்லாம் உணர்ந்துதான் டார்ட்டுப் கடவுள் கட்சியில் சேர்ந்துகொண்டான். முன்பு தலைதப்பியது தம்பிரான் புண்ணியமாய் போச்சு. வாய்வேதம் பேசும்; கிறிஸ்துவின் உபதேசங்களை நயம் குன்றாமல் சொல்லும் உல கத்தின் பாபச் சுமையை முதுகில் ஏந்தி நடப்பது போல், மனித வர்க்கத்தின் சன்னதியிலே பணிவு. டார்ட்டுப்பா, அவன் உலகத்துக்கு வழி தவறி வந்துவிட்ட தேவதூதன் என்றெல்லாம் புகழ் வார்கள், - நெருங்கிப் பழகாதவர்கள், மனித குணபாவங்களை வெகு கூர்மையாக ஊன்றிக் கவனிக்காதவர்கள். டார்ட்டுப்புக்கு வறுமை ஒரு உபயோகரமான அணிகலனாக இருந்தது; உடல் வாடாமல் பார்த்துக்கொள்ளும் அவுஷத மாகவும் இருந்தது. தினம் தினம் நீள நீளமான பிரார்த்தனை; காட்டுக் குதிரைபோல தெறி கெட்டு ஓடும் புலனறிவை ஒடுக்கிக்கொள்ள கசையடி, - இவை யாவும் உலகத்தின் போக

பாக்கியங்களை பெறுவதற்கு விரிக்கப்பட்ட நடை பாவாடையாக அமைந்தது.........

ஆர்க்கான் என்பவன் நல்ல பணக்காரன். பிறப்பிலேயே பணக்காரன். பூர்வீக ஆஸ்தியுடன், தன்னுழைப்பால் செல்வத்தையும் திரட்டியவன். அத்தனை காலமும் இகத்தில் தெய்வம் சுகத்தைக் கொடுத்துவிட்டது. மோட்சத்திலும் இடம் நிச்சயப்படுத்திக்கொள்ள அவனுக்கு ரொம்ப ஆசை. அந்த லோகத்து விவகாரத்தையும் ஆபத்துக்கிடமில்லாமல் பண்ணிக்கொள்ள மார்க்கமுண்டா என்று தேடிவரும் நாளில் டார்ட்டூபை சந்தித்தான்; வாக்கிலே தெய்வம் தேங்கிக் கிடப்பதைக் கண்டான். பரிச்சயம், தோழமையாயிற்று; ஆஷாடபூதி வந்து போவதாக இருந்தது, கடைசியில் ஆர்க்கான் வீட்டிலேயே வேரூன்றிஞன். அவன் தாயார், மகனுடைய தெய்வ பக்தியை மெச்சிஞள்; டார்ட்டூப் வருகையால் வீடே பரமபதமாகி விட்டதாக நினைத்துவிட்டாள். தாயும் மகனும் டார்ட்டூப் மனசு கோணுமல் நடந்து உபதேசத்தை பவித்திரமாக கேட்டு ஆனந்த சாகரத்தில் ஆழ்ந்தார்கள். வெகு சீக்கிரத்தில் சாகவேண்டிய கிழவிக்கும், அனுபவித்த பணமே முடிவில் ஆபத்தாக முடியுமோ என்று பயந்த ஆர்க்கானுக்கும் மோட்சத்தில் இடம் நிச்சயமாகக் கிடைக்கும் என்று தோன்றிவிட்டால் ஆனந்தம் ஏன் வராது.

ஆர்க்கானுக்கு செல்வம் மட்டும் இல்லை. மனைவி, பிள்ளைக்குட்டிகள் என்ற செல்வமும் இருந்தது. அவர்களுக்கு மோட்ச மோக விவகாரம் அத்தனை அவசரமாகப் படவில்லை. டார்ட்டுப்புக்காக லோகமே திரண்டு சேவை செய்யவேண்டும் என்று நினைக்கும் குடும்பத் தலைவன் சள்ளை தாங்கவில்லை.

ஆர்க்கானுக்கு வயதுவந்த மகனும், மகளும் அழகிற் சிறந்த மனைவியும் உண்டு. மகன் பெயர் டேமிஸ், மகள் பெயர் மேரியாஞ்; மனைவி எல்மைரா. மைத்துனன் ஒருவன் உண்டு; அவன் பெயர் கிளியாந்தஸ். இவர்கள் அத்தனை பேருக்குமே டார்ட்டுப் ஆஷாடபூதித்தனம் புரிந்து விட்டது. டேமிஸுக்கு, தகப்பனார் ஒரு அயோக்கியப் பயலுக்கு வால்பிடித்துக் கொண்டு நடப்பது சற்றும் பிடிக்கவில்லை. மகள் மேரிஞைவை வலேரி என்ற வாலிபனுக்கு கலியாணம் செய்து கொடுப்பது என்று நிச்சயமாகி இருந்தது. தவிரவும் இவர்கள் இரண்டு பேரும் மணவினையை ஆவலுடன் எதிர் பார்த்திருந்தனர். ஆஷாடபூதி வீட்டில் குடியேறியதிலிருந்து அப்பாவுக்கு லோக விவகாரத்திலேயே கண் சூன்யமாகிப் போய்விட்டதில் அவளுக்கு கோபம். எல்மைராவுக்கோ வீட்டு விவகாரங்கள் போகிற போக்கு சற்றும் பிடிக்கவில்லை. அல்லும் பகலும் டார்ட்டுப் ஜபம், டார்ட்டுப் வேதாந்த விசாரம், தன் அழகை பாழாக விடுகிறது என்று கோபம்.



காமராசர்

வீட்டிலே விவகாரம் எல்லாம் புரட்சிமய மாக இருக்கிறது என்பது ஆர்க்கானுக்குத் தெரி யும். மோட்ச சாம்ராஜ்யத்தில் சற்றும் கவலை யில்லாத இந்த ஜந்துக்களை கட்டிப்பிடித்தாவது அங்கே கொண்டுபோய் சேர்த்துவிடவேண்டும் என்று உறுதி கொண்டுவிட்டான். குடும்பத்தின் எதிர்ப்பு டார்ட்டுப்புடன் பந்தத்தை பலப்படுத் தியது. அவனே தன் வாழ்வுக்கு வழிகாட்ட வந்த பெரியார் என்று நிச்சயப்படுத்திவிட்டான். மகளை அவனுக்கு மண முடித்துக் கொடுத்து சொத்தையும் அவன் வசம் ஒப்புவிப்பதைப் போல நியாயமான காரியம் வேறில்லை என்று முடிவு கட்டினான்.

டார்ட்டுப்புக்கு கவலையற்ற சாப்பாடு கண் மூடித்தனமான பக்தி, உடம்பில் தெம்பேற்றி விட்டது. கண் நாலு பக்கமும் சுழல ஆரம்பித்து விட்டது. எல்மைராவின் அழகின்மேல் இலக்கு வைத்தான். அவள் தனியிருக்கும் நேரம் பார்த்து அருகில் சென்று உட்கார்ந்து, வேதாந்தம் பசப் பினான்; வேட்கையை வெளியிட்டு கையெட்டிப் பிடித்தான். எல்மைராவுக்கு போக்கிரியின் கோணல் புத்தியை, கூப்பாடுபோட்டு உலகறியச் செய்வதால், தன்பேரிலும் அழுக்குப்படும் என்று பட்டது. இந்தமாதிரி ஆசை வைத்து வட்ட மிடாதே என்று எச்சரித்து, புத்தியாய் பிழைக்கா விட்டால் புருஷனிடம் சொல்லுவேன் என்றாள்.

டார்ட்டுப்மேல் சந்தேகம் கொண்ட டேமிஸ், அந்த இடத்துக்கு வருகிறான். பயலைச் சந்திக்

கிழுத்தால்தான் சாயம் வெளுக்கும் என்றும் தான் ஒளிந்து நின்று அயோக்கியன் போக்கைக் கண்டதாகவும் சொல்லுகிருன்.

தற்செயலாக அந்தத் திசையில் வந்த அப்பா விடம் ஆத்திரத்தோடு சொல்லுகிருன்.

ஆர்க்கான் காதும் செவிடாகிவிட்டது. யோக்கியனை அநியாயமாகப் பழி கூறி விரட்டப் பார்க்கிறது என்று சந்தேகப்பட்டான். பையன் பேரில் அடங்காச் சினம் எழுகிறது. திட்டுகிற டேமிஸைப் பார்த்து, 'அப்பா குழந்தை, என்னை என்ன வேண்டுமாளுலும் திட்டு, இந்தச் சடலத் துக்கு அத்தனையும் வேண்டும்; ஊத்தை சடலம் அப்பா, ஒரு கோடி அழுக்குண்டு' என்று மாய் மாலம் பண்ணுகிருன்.

தகப்பனுக்கு சினம் கொழுந்து விடுகிறது. 'அடே, வீட்டை விட்டுப்போ, இப்பொழுதே போ,' என்று மகனை கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிவிடுகிருன். மகானுக்கு மனம் புண்ணுகிவிட்டதே; அதற்கு என்ன செய்து அதை ஆற்றுவது. ஆர்க்கனுக்கு ஒரே வழிதான் தோன்றுகிறது. தன்னுடைய சொத்து முழுவ தையும் அவர் பாதத்தில் வைத்து மன்னிப்பு கேட்டுக்கொள்ளுவது என்று தீர்மானிக்கிருன். இரவோடிரவாக, அவசர அவசரமாக, டார்ட் டுப்பை தனது ஏக வாரிசாக்கி, சொத்தை அவன் பெயருக்கு மாற்றி தஸ்தாவேஜி தயாரித்து

டார்ட்டுப் வசம் ஒப்படைக்கிருன். என் மகளே யும் கலியாணம் செய்துகொள்ள வேண்டும் என்று கெஞ்சுகிருன்.

‘தெய்வ சித்தம் இப்படிப்போலும்’ என்று தமது சம்மதத்தை கசிப்பிக்கிருர் ஆஷாடபூதி. சொத்து வந்துவிட்டது, வேறு என்ன வேண்டும்.

எல்மைரா புருஷனிடம் வந்து ஆஷாடபூதி யோக்கியதையைப் பரிசீலனை செய்து பார்க்கும் படி கெஞ்சுகிருள். நடந்த சம்பவம் வாஸ்தவம் என்கிருள். ‘கண்ணுல் கண்டதும் பொய், காதால் கேட்டதும் பொய்; தீரவிசாரிப்பதே மெய்’ என்கிருன் ஆர்க்கான். டார்ட்டுப்மேல் அவ்வளவு நிச்சயமான நம்பிக்கை அவனுக்கு.

‘ஆம். தீரவிசாரித்துப் பாரும்; அவனே இங்கே அழைத்து இசைவதுபோல் பாவனே செய்கிறேன்; அப்பொழுது நேரில் நீரே பார்த்து முடிவு கட்டும்’ என்கிருள். ஒளித்து வைத்து விட்டு, டார்ட்டுப்பை அழைத்துவிடுகிருள். ஆர்க்கான் கள்ளனே கையும் களவுமாகக் கண்டு பிடிக்கிருன். கண் திறக்கிறது; ஆனுல் கையில் பலமில்லே.

டார்ட்டுப் பத்திரத்தைக் காட்டி ‘சொத்து நம்முடையது, வீட்டை விட்டு வெளியில் இறங் கும்’ என்று சுய குணத்தைக் காட்டுகிருன்.

குடுமி கையில் சிக்கிவிட்டபிறகு வேதம் எதற்கு? வேஷம் எதற்கு?

சட்டப்படி வீட்டைக் காலி செய்யும்படி உத்யோகஸ்தனை அனுப்பி ஜபர்தஸ்து செய்கிருன்.

குய்யோ முறையோவென்று ஆர்க்கான் குடும்பத்துடன் வெளியேறுகிருன். டார்ட்டுேப் கடைசி அஸ்திரத்தையும் பிரயோகித்து ஆர்க்கானை கைது செய்யும்படியும் ஏற்பாடு பண்ணி விடுகிருன். ஆர்க்கானுடைய நண்பன் ஒருவன்; ராஜ கோபத்துக்காளாகி சில தஸ்தாவேஜிகளை இவன் வசம் ஒப்படைத்துவிட்டு தலைமறைவாக ஓடிப்போனுன். டார்ட்டுேப்பை நம்பியிருந்த காலத்தில், ஆர்க்கான் அந்த ரகசியத்தை ஆஷாடபூதியிடம் ஒப்படைத்திருந்தான். அது அவனுக்கு கடைசி அஸ்திரமாயிற்று. இந்த நிலையில் ராஜ சேவகர்கள் திடீரென்று பிரவேசிக்கிருர்கள். அயோக்கியன் கடைசியாக அகப்பட்டுக்கொள்ளுகிருன். தெய்வகோபம் காத்திருக்கையில் ராஜ ஆக்ஞை அவனை அடக்கி விடுகிறது.

ஆர்க்கானுக்கு மறுபடியும் சொத்து கிடைக்கிறது. மகளை நிச்சயித்தவரனுக்கே கொடுத்து, மகனை மீண்டும் வீட்டுக்கு அழைத்துக்கொள்ளுகிருன்.

# மணிமந்திரத் தீவு

[பிராஸ்பிரோ - மந்திர சக்தியும் மன்னிக்கும் குணமும் இருந்ததினுல் கதை பிறக்கிறது.

மிரான்டா - அவன் மகள் அழகி.

அன்டோனிஞே - பிராஸ்பிரோவைவிட தனக்கு ஆளத் திறமையுண்டு என்று நினைத்த சகோதரன்.

அலான்ஸோ - மகன் செத்துப்போனதாக நினைத்து வருந்தும் நேப்பிள்ஸ் அரசன்.

பெர்டினன்ட் - மிரான்டாவுக்காக ராஜ்யத்தை இழந்து விறகுவெட்டியாக இருப்பது பரம பதம் என்று நினைத்த நேப்பிள் ராஜ்யத்து பட்டத்திளவரசன்.

ஸெபாஸ்டியன் - அண்ணனைத் தீர்த்துவிட ஆசைப்பட்டவன்.

கொன்ஸாலோ - கிருத யுகம் ஸ்தாபிக்க விரும்பிய மந்திரி.

ஸ்டிபாஞே - குடிமயக்கத்தில் ராஜ பவிஷு பெற்ற பரிசாரகன்.

டிரின்குலோ - அவனுக்கு பிரதான மந்திரி.

கலிபான் - சூனியக்காரி பெற்றுப் போட்டுவிட்டுப் போன மிருக மனுஷன்.

ஏரியல் - யக்ஷிணி-குழந்தை.

மற்றும் வன தேவதைகள், மாலுமிகள், கப்பல், கடல், புயல் எல்லாம் உண்டு.]

# மந்திரவாதி

நடுக்கடலிலே நாலைந்து கப்பல்கள் தத்தளித்து தடுமாறுகின்றன. கடலலைகள் சினங்கொண்ட கருநாகங்கள்போல ஆயிரமாயிரமாக படம் விரித்து தலை சுற்றி மோதுகின்றன. உயிரை வாங்கவரும் காலதூதர்களின் கோரச் சிரிப்புப்போல் அலைவிளிம்புகள் நுரைகக்கிச் சுழிக்கின்றன. காற்ளு உன்மத்தம் கொண்ட பேய்க்கூட்டம்போல, குதியாட்டம் போடுகின்றன. வெட்டு மின்னலும் ஹுங்காடி இடியும், வானத்து இருட்டை எல்லாம் கம்பியிட்டுப் பிழிகின்றன.

இயற்கையின் இப்பெருஞ் சீற்றத்துக்கு எதிராக தரையிட்ட மரக்கட்டையும் சீலைப்பாயும் என்ன செய்யமுடியும்?

மாலுமி தீரன்தான்; அனுபவஸ்தன்தான்; கைத்த மனதுடன் உப்பந்தண்ணீர் கப்பலின் மேல்தட்டில் புரண்டோடி கப்பலையே ஆழத்தில் அமுக்க முயலுவதை பலமுறை கண்டவன்தான். ஆனுல் இப்பொழுது தன் சாகசத்துக்கு எல்லை வந்துவிட்டது என்பதை கண்டுகொண்டான்.

"தெய்வத்தின்மேல் பாரத்தைப் போட்டு எல்லோரையும் பிரார்த்தனை செய்யச்சொல்லு" என்று கீழ்த்தட்டில் உயிரை மடியில் கட்டிக் கொண்டிருக்கிறவர்களுக்கு சொல்லியனுப்பி விடுகிருன்.

அதே நிமிஷத்தில் கப்பல் பாறையில் மோது கிறது.

அத்தனை ஜீவன்களும், அவனவன் உயிருக்காக ரௌத்ராகாரமான கடலுடன் மல்லாடுகிறான்.

இப்படியாக ஒரு கோஷ்டி ஜனங்களை ஒரு தீவில் நாடகாசிரியன் எடுத்துச் சிதறுகிறான். அதிலே மனுஷ குண விகர்ப்பங்கள் எத்தனை உண்டோ அத்தனையும் அதில் உண்டு. நேப்பிள்ஸ் தேசத்து மன்னனான அலான்ஸோ; அவனுடைய சகோதரனான ஸெபாஸ்டியன்; அண்ணனை விரட்டிவிட்டு ஆட்சியை கைப்பற்றிக் கொண்ட மிலான் நகரத்து ட்யூக்; அவன் பெயர் அன்டோனியோ. நேப்பிள்ஸ் அரசனின் மந்திரியான கொன்ஸாலோ; அலான்ஸோவின் மகன், ஆணழகன் பெர்டினன்ட், குடிகார ஸ்டிபானோ, விதூஷகன் டிரின்குலோ, மற்றும் மாலுமிகள் மந்திரிகள், முதலிய அத்தனைபேரும் கரையில் தொத்தி ஏறுகிறார்கள்.

## 2

"இன்றுதான் என் கிரகங்கள் உச்சத்தில் நிற்கின்றன. காலதாமதம் ஏற்பட்டால் காரியம் கெட்டுப்போகும். ஏவின வேலையை சரிவரச் செய்தாயா?"

அந்த நிர்மானுஷ்யமான தீவிலே முடிசூடாத மன்னனாக ஆட்சி புரிந்துவரும் மந்திரவாதியான

பிராஸ்பிரோ கேட்கிருன். அவன் உடம்பிலே யந்திரமும் சக்கரமும் பொறித்த ஒரு மந்திர அங்கி கிடக்கிறது. கையிலேமாத்திரைக்கோல்.

"ஆமாம் எஜமானே. அத்தனை பேரையும், ஒரு சிறு காயம்கூட இல்லாமல் கரைசேர்த்து விட்டேன். பயங்கரமான புயலை உண்டுபண்ணி னேன். கப்பலை கரை அருகே கொண்டு வந்தேன். இப்பொழுது எல்லாரும் தீவின் நாலாகரைகளி லும் ஏறிவிட்டார்கள். இனி எனக்கு விடுதலை எப்போ" என்று கெஞ்சுகிறது அவன் முன் நின்ற யக்ஷணிக் குழந்தை. அதன் பெயர் ஏரியல். மெல்லிய காற்றைப்போல் அவ்வளவு பசலே.

'உனக்கு அதற்குள் அத்தனை அவசரமா? வேலை எல்லாம் குறைவற முடியட்டும். அந்த சூனியக்காரி ஸிக்கோராக்ஸ் உன்னை மரத்தில் ஆணியடித்து விடவில்லையா. அதை மறந்து விட்டாயா. நான்தானே ஒன்னை மீட்டு வளர்த் தேன். சொன்ன வேலையை செய்; அப்புறம் கேள்' என்கிருன் பிராஸ்பிரோ.

இத்த மந்திரவாதி தனது கையில் சிசுவை யும் மந்திரத்தையும் ஏந்தி இந்த தீவுக்குள் குடி யேறுவதற்கு முன், ஸிக்கோராக்ஸ் என்ற சூனி யக்காரி இதை தனது கொடுமையால் அளந் தாள். அவள் பிறந்தவூர் ஆல்ஜியர்ஸ். அவளது அட்டூழியங்களை சகிக்க முடியாமல் கப்பலேற்றி விடுகிருர்கள். அப்பொழுது அந்த சூனியக்காரி

கர்ப்பிணி. இங்கே வந்த பிறகு ஒரு குழந்தை பிறக்கிறது. அது மனிதனுமல்ல; மிருகமுமல்ல. மனித உருக்கொண்ட மிருகம். பன்னிரண்டு வருஷங்கள் இந்த தீவிலே உள்ள தேவதைகளை யெல்லாம் ஆட்டி வைத்து விட்டு செத்து மடிகிருள். மனித மிருகமான அல்லது மிருக-மனிதனுன அக்குழந்தை அனுதையாகிறது.

இந்த நிலையில்தான் மந்திரவாதி பிராஸ்பிரோ, கையிலே பெண்குழந்தையும் மந்திர சாஸ்திரமும் தாங்கி இந்தத் தீவில் தஞ்சம் புகுகிருன். பிராஸ்பெரோ பிழைப்புக்காக மந்திரவித்தை கற்றவனல்ல. மிலான் நகரத்து ட்யூக் அவன். நிர்வாகத்திலே கவலைசெலுத்தி அரசியல் களறில் காலைவிட்டுக்கொண்டு உழலாமல்,சகபாடிகளான மனுஷவர்க்கத்தை சட்டத்தையும் வாளையும் காட்டி வசக்கி நடத்த ஆசைப்படாமல், புஸ்தகத்திலே கவனம் செலுத்தி தேவதைகள் மீது ஆட்சி செலுத்துவதில் மோகம் கொண்டது தான் அவன் குற்றம். இது இவனுடைய சகோதரனுன அன்டோனியோ 'சமயமிது, சமயமிது' என்று ஆட்சியைத் தன் வசப்படுத்திக்கொண்டான். முதுமையும் கருணையும் கொண்ட கொன்ஸோலோவின் உதவியால், பிராஸ்பெரோ காதல் வைத்த மந்திர புஸ்தகங்கள் அவன் வசம் சிக்கி விட்டன. சகோதர வைரியான அன்டோனியோ பிராஸ்பிரோவையும் குழந்தையையும், இனி எக்காலத்திலும் உயிருடனே அல்லது செத்து மடிந்

தோ தனக்கு வைரிகளாகிவிடக் கூடாதபடி ஒரு படகில் ஏற்றி கடலுக்கும் காற்றுக்கும் அர்ப்பணம் செய்துவிடுகிறான். நாகரிக மக்கள்மீது ஆட்சி செலுத்துவதில் லயிப்பற்ற பிராஸ்பிரோவை அவன் நாட்டங்கொண்ட வனதேவதைகள் மீதே ஆட்சி செலுத்தும்படி இந்தக் கண்ணற்ற தீவில் கொணர்ந்து தள்ளிவிடுகிறது.

கரையேறிய பிராஸ்பிரோ ஏரியலை மீட்கிறான்; அனாதையாகக் கிடந்த மிருகக் குழந்தையை மடிந்து போகாமல் காப்பாற்றி காலிபன் என்ற பெயரிட்டு வளர்க்கிறான். பிராஸ்பிரோவின் நெஞ்சில் பாசம் வரண்டுவிடாதபடி மூன்று குழந்தைகள் வளர்கின்றன. ஒன்று காற்றில் மாயாவியாக அலைந்து அதன் ஏவிய பணியைச் செய்யும் ஏரியல். தாமச குணமும் க்ஷாத்திரமும் கொண்ட காலிபன், அடிமையாக வீட்டுக்கு வேண்டிய தேவைப்பொருள்களை தேடிக்கொடுக்கும் வேலை செய்து வருகிறான்; தனக்குத்தான் தீவை ஆள உரிமை உண்டு; மந்திரவாதி தன்னை ஏமாற்றி அதைப்பிடுங்கிக்கொண்டான் என்ற கோபம் மடியவில்லை. பிராஸ்பிரோவுடன் காற்றையும் கடலையும் தாண்டிவந்த சிசு. அவன் மனசில் வாஞ்சைக் கொழுந்து படர வளர்கிறது. அவளுக்கு மிரான்டா என்று பெயர்.

இப்படியாக பனிரெண்டு வருஷங்கள் கழிந்தன. மிலான் சம்பவம் எப்போதோ நடந்த கதை

யாகி எல்லோரும் பிராஸ்பிரோவை மறந்து விட்டார்கள்.

நேப்பிள்ஸ் அரசனான அலான்ஸோ தன் மகளை ட்யூனிஸ் ராஜ்யத்து இளவரசனுக்கு கலியாணம் செய்து கொடுத்தான். மணவினைக்காக சென்றிருந்த கோஷ்டிதான் இது; ஏரியலின் சக்தியால் ஏற்றுண்டு மணி மந்திரத் தீவில் கரையேறியது.

"இப்படிப்பட்ட செழிப்பான தீவு ஒன்றுக்கு நான் அரசனாக இருந்தால்"..., பழுத்து முதிர்ந்த கிழவனான கொன்ஸாலோ ஆரம்பிக்கிறான்.

கடலுக்குத் தப்பிய ஒரு கோஷ்டி ஒன்று உட்கார்ந்திருக்கிறது. பட்டத்து இளவரசனும் தன் பாசத்துக்கு கொழு கொம்புமான பெர்டினண்ட் மாண்டு மடிந்துவிட்டான் என்று அலான்ஸோ மனம் வேகிறது. ஆழக் கடலுக்குள் மகன் மூழ்கி மூச்சடைந்து மாண்டு போனான்; இனி என்ன வாழ்வு என்று மனங் கைத்துச் சோர்ந்து விட்ட அரசனுக்கு மனசை வேறு திசையில் திருப்ப கிழவன் முயற்சிக்கிறான். அந்தக் கோஷ்டியில் உள்ள மற்றவர்கள் கிழவனின் கனவை நையாண்டி செய்கிறார்கள்.

கொன்ஸாலோ மேலும் விவரிக்கிறான்: இந்த ராஜ்யம் அங்குள்ள யாவருக்கும் பொதுச் சொத்து. அங்கே பேரமும் பித்தலாட்டமும் இருக்காது. நீதி கண்டு சொல்ல ஒருவனும்

இருக்கமாட்டான். அ தி கா ர ம் கிடையாது. செல்வமோ வறுமையோ இருக்காது. கொத்தடிமை, சேவகம் கிடையாது. பந்தகம், வாரிசு, எல்லே, வேலி எதுவும் இருக்காது. வரி இருக்காது; ம து வ ன ம் இருக்காது. நாகரிகத்தின் பலன்களான உலோகம், தான்யம், மது, எண்ணே எதுவும் இ ரு க் கா து. அங்குள்ள யாவரும் உழைக்க வேண்டாம். ஆண்கள் சும்மா இருப்பார்கள்; பெண்களும் அப்படித்தான்; களங்க மற்று, குணம் நிறையாது இருப்பார்கள். அங்கே ராஜ்யாதிகாரமும் இருக்காது........

'ஆனல் நீ அதற்கு ராஜா', என்று சிரிக்கிருன் ஸெபாஸ்டியன்.

'கிழவனுர் பொதுச் சொத்தின் பின்பாதி முன் கதையை மறக்கிறதையா' என்கிருன் அன்டோனியோ.

கொன்ஸாலோ அதைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லே. 'அங்கே இயற்கை கொடுப்பது யாவருக்கும் பொது: வியர்வையோ உழைப்போ சிந்தவேண்டிய அவசியம் கிடையாது. துரோகம், அயோக்யத்தனம், வாள் வல்லீட்டி, துப்பாக்கி, யந்திரம் எதையும் நான் அனுமதிக்கமாட்டேன். இயற்கை தனக்குள்ள செழிப்பிலே, வளத்திலே, கல்வியிலே கை நி றை ய கொடுப்பது எனது மக்களே போஷிக்கும்........"

‘பெரியார் பிரஜைகளிடை கலியாணம் இடையாதோ’ என்று கிண்டல் பண்ணுகிறான் செபாஸ்டியன்.

‘எல்லாம் சும்மா அப்பா; அயோக்யர்களும் அவிசாரிகளுந்தான்’ என்றான் அன்டோனியோ.

கிழவன் இவர்கள் பேச்சை சட்டை செய்ய வில்லை.

‘இம்மி பிசகாது என் ஆட்சியில்; அதற்கு எதிரே கிருதயுகம்கூட ஈடாக நிற்க முடியாது...’

‘மன்னர் நீடூழி வாழ்வாராக.’

‘கொன்ஸாலோ நீடூழி வாழ்வாராக.’

‘நான் சொன்னதைக் கவனித்தீர்களா’ என்று அலான்ஸோவை கேட்கிறான் கொன் ஸாலோ.

‘பேசாமலிரு; அது என் காதில் விழாது இப்பொழுது’ என்று விடுகிறான் அரசன்.

அந்த நிலையிலே ஏரியல் மாயாவியாக வந்து கண்ணைச் சொருகும் இசை ஒன்றை எழுப்பு கிறான்.

புத்திரசோகத்தில் ஆழ்ந்த அலான்ஸோவுக் கும் கண்ணுறக்கம் வந்துவிடுகிறது.

மிஞ்சியவர்கள் அன்டோனியோவும், மன்னனுடைய சகோதரனை ஸெபாஸ்டியனுமே.

இந்திர போகத்திலமர்ந்தாலும் இயற்கை.

ராஜ்யலக்ஷியத்தைப்பற்றிய கொன்ஸாலோவின் கனவு விழித்து, காவல் நிற்பவர்கள் மனசில் ராஜ்ய மோகத்தை கிளப்புகிறது.

அயோக்கியத்தனத்தால் நல்ல பயனும், அதைச் சாதிக்க வசதியும் கிடைத்தால், யாருக்குத்தான் அயோக்கியனை விருப்பமிராது.

அண்ணனை விரட்டி ஆட்சியை லகுவில் கைப்பற்றிக்கொண்ட அன்டோனியோ, ஸெபாஸ்டியன் மனசில் ஆசை வித்தை விதைக்கிறன். ஆதி கொலைகாரனை கெய்ன், ஆரம்பித்து வைத்த சகோதரத் துரோகம் மனுஷ உடம்பின் நாடியோடு நாடியாக ஒன்றி சமயம் ஏற்பட்ட போதெல்லாம் உச்சத்தில் ஓடுகிறது என்று சொல்லுகிறது விவிலிய வேதம். அலான்ஸோவைத் தீர்த்துவிட்டால், வாரிசு யார். மகள் ட்யூனிலிருந்து கடலைத் தாண்டிக்கொண்டு உரிமை கொண்டாடி வரப்போகிறர்களா. மணிமுடி உடனே ஸெபாஸ்டியன் தலையில் வந்து அமர்வதைத் தவிர அதனல் வேறு என்ன செய்யமுடியும். அன்டோனியோ சக்கரவட்டமாகச் சுற்றி வளைத்துச் சொல்லி ஸெபாஸ்டியன் மனசைக் கெடுத்துவிடுகிறன். கிழவனை ஒருவ

னும் மன்னனை ஒருவனும் தீர்த்துவிடுவது என்று சதி போடுகிறார்கள்.

யக்ஷணிக் குஞ்சான ஏரியல், தன் எஜமான் ஏவல்படி இவர்களுடைய உயிருக்கு ஆபத்து வராமல் காத்து நிற்க வேண்டியவன்.

கொன்ஸாலோ காதில், "குரட்டை போடாதே, அருகே கொலைக்கும்பல் கும்மாளம் போடுது பார்" என்று ஓதுகிறான்.

கொன்ஸாலோவும் மன்னனும் திடுக்கிட்டு விழித்துவிடுகிறார்கள். ஏதோ சத்தத்தைக் கேட்டு கத்தியை ஓங்கியதாக சொல்லி சதிகாரர்கள் தப்பித்துக்கொள்ளுகிறார்கள்.

இந்தக் கோஷ்டி பட்டத்து இளவரசன் பெர்டினண்ட் கதியென்ன, என்று தேடிச் சொல்லுகிறது.

### குடிகார ராஜா, கோமாளி மந்திரி

ஸ்டிபானோ ஒரு பட்லர். புட்டியிலே சொர்க்கத்தை தரிசித்தவன். கப்பல் போய்விடும் என்று நிச்சயமாகத் தெரிந்தவுடன் கடலில் குதிக்கத் துணிந்துவிட்டான். ஆனால் ஒரு பீப்பாய் சாராயத்தை உருட்டிக் கொண்டுவந்து ஒரு மிதப்புக் கட்டையாக உபயோகித்து பீப்பாயும் தானுமாக கரை சேருகிறான். கரைக்கு வந்தவுடன் முதல் வேலையாக பீப்பாயை பத்திரமான இடத்தில்

பதுக்கி வைத்துவிட்டு, புட்டி நிறைய சாராயத்தை ஊற்றி எடுத்துக்கொண்டு தீவைச் சுற்றிப் பார்க்க புறப்படுகிறான். புட்டிதான் அவனுக்கு பயத்தை தெளிவிக்கிறது. பேச்சுக் கொடுக்கும் தோழனாக, பசி போக்கும் மாமருந்தாக இருக்கிறது. போதை ஜன்னியில் தன் ஞாபகத்துக்கு வந்த பாட்டுகளையெல்லாம் பாடிக்கொண்டு வருகிறான்.

விதூஷகனாக டிரின்குலோ வேறு ஒரு பக்கத்தில் கரையேறி திசைகெட்டு நடந்து வந்து கொண்டிருக்கையில், வேலை செய்வதற்கு மனமில்லாமல் சோம்பி படுத்துக்கிடக்கும் காலிபனைக் கண்டுவிடுகிறான். அவனுடைய ஆராய்ச்சிக்கு காலிபன் ஒரு காட்டு மனுஷனாக தோன்றுகிறது; மறுபடியும் இடிச்சத்தம் கேட்டு காலிபனுடைய அங்கிக்குள் நுழைந்துவிடுகிறான்.

போதையில் தன்னை மறந்து பாடிக்கொண்டு வரும் ஸ்டிபானோவும் அந்த இடத்துக்கு வந்து சேருகிறான். அவன் கண்ணிலும் காலிபன் தென்படுகிறான். அவனை மெதுவாகப் பிடித்துக் கொண்டு ஊருக்கு கொண்டுபோய்விட்டால், பணங்காய்ச்சி மரத்தை கொல்லையில் நட்டு விட்டமாதிரி தோன்றுகிறது.

மிருகத்திடம் நெருங்குகிறான். அது மனுஷ பாஷை பேசுகிறது. இன்னும் அந்த மிருகத்துக்கு நாலுகால், இரண்டு குரல்,

இதென்ன விபரீதம். மிருகம் இரண்டாக பிரிந்து அதிலிருந்து விதூஷகன் பிரசன்னமாகிருன். பிசாசு அல்ல, பழைய நண்பன் டிரின்குலோதான் என்று நிச்சயமானபிறகு, காலிபனிடம் பேச்சுக்கொடுத்துப் பார்க்கிருர்கள். பேச்சுக்கு மசியாத பிசாசு, புட்டிக்கு மசிந்துவிடுகிறது. உள்ளே என்றுமில்லாத சுறுசுறுப்பு தட்டவும், காலிபனுக்கு தன்னைக் கைதூக்கவந்த கடவுளாகவே ஸ்டிபானே தென்படுகிருன். இவனுக்கு அடிமையாகிவிட்டால், விறகு சுமக்கும் வேலைச் சள்ளை கிடையாது. புட்டி பொருளுக்காக தனக்கு சொந்தமாகி இருந்திருக்க வேண்டிய ராஜ்யத்தையே இவன் காலடியில் வைத்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கெஞ்சுகிருன்.

புட்டி கொடுத்த புதிய புத்தித் தெளிவிலே, ஸ்டிபானேவுக்குப் பட்டாபிஷேகம் க்ஷணகாரியமாக நடந்துவிடுகிறது. அவனுடைய பிரதான மந்திரி டிரின்குலோ; பிரதான பிரஜை மிருகப் பிராயம் நீங்காத காலிபன்.

'இந்தத் தீவு எனக்குத்தான் சொந்தம்; எங்கம்மா கொடுத்தது. இதை பிராஸ்பிரே என்கிற ஒருத்தன் என்னிடமிருந்து ஏமாற்றிப் பிடுங்கிக்கொண்டு என்னை அடிமையாக்கிவிட்டான். இந்தத் தீவிலே பசிச்சிருக்க வேண்டாம்; வகைவகையாய்ப் பழங்களுண்டு; கண்ணை மூடிப் படுத்துவிட்டால், அதிலே சுகமான

பாட்டு கேட்டுக்கொண்டே இருக்கும்; எழுந் திருக்கவே ஆசை எழாது. அவ்வளவு சுகம். இந்தத் தீவு உனக்கே உனக்கு, உன் அடிமை நான்' என்று ஸ்டிபானோ காலடியில் வைத்து விட்டான்.

'அந்த கொடுங்கோலன் மத்தியானத்தில் கொஞ்ச நேரம் தூங்குவான். அவனைக் கொன்று விடு; அப்புறம் நமக்கு கவலையே கிடையாது' இதுவே காலிபன் முறையீடு.

'அகோவாராஸ் மதிமந்திரி; புறப்படு புரட்சி செய்வோம்' என்று பிறக்கிறது சுக்ரீவ ஆக்ஞை.

இந்த நிலையில் ஏரியல் மாயாவியாக வந்து அவர்களை மோகன இசை ஒன்றில் மதிமயங்க வைத்து, குரல் செல்லும் திசையில் கோவேறு கழுதைகள்போல தொடரும்படி கல்லிலும் முள்ளிலுமாக இழுத்துச் செல்லுகிறான்.

## எந்த ராஜ்யம் எப்படிப் போனால் என்ன?

பெர்டினன்ட் மடியவில்லை. நீந்திக் கரையேறி ஏரியலின் மோகனப் பாட்டை பின்தொடர்ந்து பிராஸ்பிரோ மகளைக் கண்டுவிடுகிறான். கண்ட வுடன் காதல். காட்டுக்கொடி போலும், வன தேவதை போலும் கண்முன் நின்ற மிராண்டா வுக்காக எந்த ராஜ்யத்தை வேண்டுமானாலும் தியாகயம் செய்யவும் தயாராகிவிட்டான். தகப்

பனைத் தவிர மனுஷவர்க்கத்தையே பார்க்காமல் வளர்ந்த மிராண்டாவுக்கு அவன் இந்த உலகத்தவன் அல்லவென்றே படுகிறது. அப்படி இருவரும் காதல் பித்தேறி விடுகிறார்கள்.

பிராஸ்பிரோவுக்கு இவர்கள் மன நிலை புரிந்துவிடுகிறது. இவர்களது பாசம் நிலைத்தது தானா என்று பரிட்சிக்க பெர்டினன்ட்டை விறகு வெட்டச் சொல்லி பணியாள் நிலைக்கு ஆக்கிவிடுகிறான். மிராண்டா நடமாடும் உலகில் விறகு வெட்டியாக காலங்கழித்தாலும் போதும், அதுவே பரம பதம் என்று கருதுகிறான். பெர்டினன்ட் - மிராண்டா இருவருடைய காதல் வழி அவ்வளவு கரடுமுரடாக இல்லை. பிராஸ்பிரோ மன்னித்து, மணவினைக்கு ஆசியளித்து காத்திருக்க கட்டளையிடுகிறான். தன்னுடைய திறமையால் இந்திர ஜாலவித்தை நடத்துகிறான். மாத்திரைக்கோல் சுழற்றியதும், கவியின் உள்ளத்தில் குதித்தெழும் கற்பனைகள்போல வனதேவதைகள் அவர்கள் முன் தோன்றி பாட்டுப்பாடி மகிழ்விக்கிறார்கள்.

காதல் வளம்பாடி நடனம் புரிய நதித் தேவதைகளும் அறுவடைக்காரர்களும் வந்து ஆடுகிறார்கள்.

இந்த நிலையில் குடிகார ராஜாவின் சதிக் கும்பல் தனது இருப்பிடத்தை நோக்கி தேடி வருவது நினைவுக்கு வருகிறது. சட்டென்று

வனதேவதைகளை அனுப்பிவிட்டு புறப்பட்டு விடுகிறான்.

## பிராஸ்பெரோ மாயவலை

மகனைத் தேடிவரும் மன்னன் கோஷ்டி, சமயத்தை எதிர்பார்க்கும் உள்ளுறை நோய் போன்ற கொலைக் கும்பலுடன் தீவுக்குள் வெகு தூரம் வந்துவிட்டது. கிழவன் கொன்ஸாலோ, இனி ஒரு அடி எடுத்துக்கூட வைப்பதற்குச் சக்தியில்லை என்று உட்கார்ந்துவிடுகிறான். மன்ன னுக்கும் தளர்வு தட்டுகிறது. யாவருக்கும் பசி காதை அடைக்கிறது.

இந்தச் சமயத்திலே ஏரியல் அசரீரியாக வந்து மறுபடியும் தனது மோகனப் பாட்டைப் பாடுகிறான்.

யாவரும் பிரமித்து நிற்கையிலே, தேவதை கள் கோஷ்டி ஒன்று அவர்கள் முன்னிலையிலே விருந்து படைக்கிறது. பசி கழுத்தைப் பிடித்து நெட்ட மன்னனும், மற்றோரும் நெருங்குகிறார் கள்; ஆனால் ஏரியல் பயங்கரமானதொரு கூனி யாகத் தோன்றி உணவுவகைகளை சிறகில் தட்டிக்கொண்டு மறைகிறான். ஆசைக்கும் நுகர்ச்சிக்கும் இடையில் எதிர்பாராத இந்த மதில் எழுந்துவிட்டது.

'ஆயிரம் பேய்களானாலும் சரி; ஒவ்வொன் றாய் வந்து பார்க்கட்டும்' என்று கர்ஜிக்கிறான் ஸெபாஸ்டியன்.

சோந்த கோஷ்டி பட்டினியுடன் தோழமை கொள்ளுகிறது.

## ஐயோ, வேட்டை நாய்

ஸ்டிபானோ புரட்சிக் கும்பல், பாட்டில் சொக்கி, கல்லிலுமுள்ளிலும் இழுபட்டு கடைசியில், சகதிக்குட்டை ஒன்றில் விழுந்து, புட்டியையும் பறிகொடுத்து பிராஸ்பிரோ குகையை அணுகிறது. 'வந்துவிட்டோம்; வீரா உன் வினைத் திறமையை காண்பி' என்று காலிபன் அவசரப்படுகிருன்.

பட்டங்கட்டிஞலும் பழைய வாசனை போகவில்லை. கொடியில் உலர்த்தப்பட்டிருந்த பட்டும் பட்டாடையும் கண்டு அதைத் தட்டிக்கொண்டு போவதுதான், தன்ராஜ காரியத்தில் முதல் கடமை என்று நினைக்கிருன் ஸ்டிபானோ. ராஜாவே இப்படி என்ருல் மந்திரியைக் கேட்க வேண்டுமா. 'எனக்கிது, இது' என்று கொண்டே துணி மணிகளை மூட்டை கட்டி காலிபன் முதுகில் ஏற்றுகிருர்கள். கதிமோட்சம் நாடிய காலிபன் பொதி கழுதையானுன். வீரமெல்லாம் இவ்விருவர் சற்றுமுன் எழுப்பிய நம்பிக்கை போல குட்டையில் விழுந்து சகதியைப் பூசிக் கொண்டன. காலிபன் அங்கலாய்க்கிருன், அவசரப்படுகிருன். முதலில் திருடுவோம்; அப்புறம் புரட்சி என்பது ஸ்டிபானு பத்வா-இந்தச் சமயத்தில் வேட்டைநாய்களின் ஹூங்காரம்

கேட்கிறது. பிராஸ்பிரோவும் ஏரியலும் பயங்கரமான நாய்களை ஏவி முயல் வேட்டையாடி வருகிறார்கள்; முயல்வேட்டை மனுஷ வேட்டையாகிறது.

புரட்சிக்கும்பல் பிளிறிக்கொண்டு ஓட்டமெடுக்கிறது.

'இவர்களை விரட்டிக்கொண்டு போ; உடம்பெல்லாம் குத்தும் குடைச்சலும் உண்டாக்க குட்டிச் சாத்தான்களை ஏவி விடு' என்று உத்தரவு போட்டுவிட்டு வேறு திசை செல்லுகிறான் பிராஸ்பிரோ.

## மந்திரவட்டம்

மன்னன் கோஷ்டி, பிராஸ்பிரோ மந்திரம் ஜபித்து மாயவட்டம் கீறிய பிரதேசத்துக்கும் பிரவேசித்து திகைப்புண்டு மிதித்தவர்கள் போல அடியெடுத்து வைக்கமுடியாமல் சிக்கிக் கொள்ளுகிறார்கள்.

மந்திரிச்சட்டையணிந்து மாத்திரைக்கோல் ஏந்தி, பிராஸ்பிரோ அவர்கள் முன் தோன்றுகிறான்.

'எனது மந்திர சக்தியின் வலிமையால், சூரியனை இருட்டாக்கி, புயலை எழுப்பி உங்கள் எல்லோரையும் என் கைக்குள் சிக்க வைத்தேன். நான் மந்திரவாதி, தீவின் அதிபதி, மிலான்

ஆட்சி இழந்த பிராஸ்பிரோ. ' இப்பொழுது சிறுமை மனிதர்கள் செயல்கள்மீதுள்ள என் சினம் அடங்கிவிட்டது. அரசே வருக. குண சம்பன்னனுன கொன்ஸாலோவே வருக. சகோதரத் துரோகிகளே, உங்கள் வரவும் நல் வரவாகட்டும். நீங்கள் என் அதிதிகள்' என்கிருன் பிராஸ்பிரோ.

புத்திரசோகம் தீரவில்லை, அலான்ஸோவுக்கு. 'நானும் உம்மைப்போல ஒரு மகளை இழந்துவிட்டேன், இதோ பாருங்கள்' என்று மாத்திரைக்கோலைத் தூக்குகிருன் பிராஸ்பிரோ.

மிராண்டாவும் பெர்டினண்டும் குகையில் சதுரங்கம் ஆடும் காட்சி தெரிகிறது.

'உமது மகன் என் மகளை கவர்ந்துவிட்டான்' என்கிருன் பிராஸ்பிரோ.

ஏரியல் விரட்ட, திருடிய துணிமூட்டைகளுடன் ஸ்டிபானே—காலிபன் கோஷ்டி வருகிறது. வேறு திசையிலிருந்து மாலுமிகளும் மற்றுமுள்ளோரும் வருகிருர்கள்.

'நேப்பிள்ஸில் கலியாணம் முடிந்தபின் மிலானில் படித்துப் பொழுதுபோக்க இடம் கிடைத்தால் போதும்'. இதுதான் பிராஸ்பெரோ ஆசை.

'எங்களை க்ஷேமமாக நேப்பில்ஸ் சேர்த்தபின் நீ உன் இஷ்டம்போல காற்றில் ஓடியாடித்

திரிந்து மகிழ்' என்று ஏரியலுக்கு விடை கொடுக்கிறான். யக்ஷணிக் குழந்தையானாலும் பிராஸ்பிரோவுக்கு பிரிய மனமில்லை. அதன் மேல் அவ்வளவு ஆசை படர்ந்துவிட்டது. இருந்தாலும் அதன் ஆசை இருக்கிறதே.

தான் வழிபட்ட தெய்வம்; போதை மயக்கம் தெளியாத பரிசாரகன் என்பதில் காலிபனுக்கு மகா வெட்கம்.

காலிபன், காதிலே வன தேவதைகளின் இசை நிரம்ப, எழுந்திருக்க மனமில்லாதவனாக, கண்மூடிக் கிடந்து, ஏக சக்கராதிபதியாக ஆளுகிறான்.

தீவும் தனிமை கண்டது.

# தர்மதேவதையின் துரும்பு

[ராஜகுடும்பம்

கிளாடியஸ் — அண்ணனைக் கொன்று அரசாட்சி பெற்றவன்.

ஜெர்ட்ரூட் - அண்ணன் மனைவியாயிருந்த அவன் மனைவி.

ஹாம்லெத் - அண்ணன் மகன் - அல்லாடும் மனத்தன்.

மந்திரி குடும்பம்

பொலோனியஸ் - அதிசாகசத்தால் அனுவசியமாக செத்தவன்.

லேயர்ட்டீஸ் - காரியத்தில் கருத்தும் பேச்சில் படபடப்பும் உள்ளவன்.

ஓபிலியா - தகப்பனை நம்பி, காதலித்தவனை இழந்து சித்தங் கலங்கி மாண்ட சிறுமி.

பள்ளித் தோழர்கள்

ஹொரேஷியோ - யோக்கியமான நண்பன் - ஹாம்லெத்தின் பள்ளித்தோழன்.

கில்டன்ஸ்டர்ன்<br>ரோஸன்<br>கிரான்ட்ஸ் } அயோக்கிய நண்பர்கள் - அவர்களும் அவனுடன் படித்தவர்கள்தான்.

பிசாசு, சோல்ஜர்கள், பணியாட்கள் முதலியோரும் வந்து போவார்கள்.]

## 1

### 'யார் அங்கே?'

குரலிலே அதிகார தோரணையும் அதனுடன், பயமும் கலந்திருந்தது. கடுங் குளிரிலே, இருட்டின் திரைக்குள்ளே, ஈட்டிபோல பாய்ந்தது அக்குரல்.

'நீ யார்; முதலில் அதைச் சொல்லு' என்று பதில் கேள்வி பிறந்தது, கன்னக்கனிந்து திரண்டு நின்ற இருள் பிழம்பிலிருந்து.

'மன்னர் நீடூழி வாழ்க'.

'என்ன பெர்னடோவா'.

'ஆமாம்'.

'குளிரும் பல்லைக்கிடுக்கிறது; மனசும் ஒரு நிலைகொள்ள வில்லை'.

'எப்படியப்பா உன் பாராவிலே எதுவும்...'

'ஒரு சுண்டெலிகூட அசங்கலெ......'

'சரி பின்னெ போரேன்'.

'வழியிலே மார்ஸெலஸும் ஹொரேஷியோவும் வந்தா சீக்கிரம் வரச்சொல்லு'.

டென்மார்க் ராஜ்யத்தில் தலைநகரில் வெளி மதில் பாராக்காரர்கள் இவர்கள். அதோ மார்

ஸெல்ஸனும் ஹொரேஷியோவுமே வந்துவிட்டார்கள். ராஜ்யத்திலே பரிசீலனை செய்து புரிந்து கொள்ளுவதற்குக்கூட அவகாசம் கொடுக்காமல் புதிர்போல பல சம்பவங்கள் நடந்துவிட்டன.

டென்மார்க் அரசனான ஹாம்லெத், ஆரோக்கியமாக வாழ்ந்து வந்தவர், திடீரென்று ஒருநாள் நந்தவனத்தில் தூங்கிக்கொண்டிருந்தவர் மாண்டு கிடந்தார்.

விட்டன்பெர்க் சர்வகலாசாலையில் படித்துக் கொண்டிருந்த இளைய ஹாம்லெத் பட்டத்துக்கு வராமல் அவனுடைய சித்தப்பாவான கிளாடியஸ் முடிசூட்டிக்கொண்டான். அதுமட்டுமா, ராணி ஜெர்ட்ரூடையும் கலியாணம் செய்து கொண்டான். மரணத்தின் காரணம் புரியவில்லை. இந்த அவசரப்பட்ட கலியாணம் என்ற கேலிக் கூத்தின் விபரீதமும் புரியவில்லை.

ஹொரேஷியோ இளைய ஹாம்லெத்துடன் சகபாடியாக வாசித்தவன். இந்த பாராக்காரர்கள் சொல்லும் ஒருவிபரீதத்தை நேரில் பார்க்க வந்திருக்கிறான். மெத்தப் படித்து விவகார ஞானம் பெற்ற அவனுக்கு 'இது வெறும் கனவு' என்றுதான் படுகிறது. தான் கண்ணாரக் கண்ட பெர்னடோ மறுபடியும் விவரிக்கிறான்.

நேற்று ராத்திரி, அதோ அந்த நட்சத்திரம், இங்கே வரும்போது, இதோ இப்பொழுது

பிரகாசிக்கிறதே அங்கே வரும்போது, நானும் மார்செலஸும்......அப்பொழுது மணி ஒன்று அடித்தது......

'சூ, பேசாமலிரு...' என்று சுட்டிக்காட்டுகிறான் மார்செலஸ்...

ஏதோ சாயாரூபம் மாதிரி ஒன்று தூரத்தில் தென்பட்டது. இறந்த மன்னனுடைய ஆவி. அதே நடை: அதே மிடுக்கு.

'ஹொரேஷியோ, நீ படிச்சவனுச்சே. அதனுடன் பேசு' என்று தூண்டுகிருன் மார்செலஸ்.

ஹொரேஷியோ தெய்வத்தின்மீது ஆணையிட்டு அதை வழிமறித்து 'நீ யார்' என்று கேட்கிருன்.

அது முகத்தில் கோபத்தைக் காட்டி மிடுக்காக அகன்று விடுகிறது.

'போய்விட்டது' என்கிருன் மார்செலஸ்.

'இது ஏதோ ராஜ்யத்தில் கெடுதலுக்குத் தான் அறிகுறி. ரோம் சாம்ராஜ்யத்தைக் கட்டி ஆண்ட ஜூலியஸ் ஸீஸர் விழுந்தபோதும் ரோமாபுரி தெருக்களில் பிசாசுகள் நடமாடினவாம்; வால்வெள்ளி தோன்றியதாம்; ரத்த மழை பெய்ததாம்...அதோ மறுபடியும் வந்து விட்டது.

அதை மறுபடியும் ஆணையிட்டு தடுத்து நிறுத்தி கேள்விகள் போடுகிறான்.

எங்கோ ஒரு கோழி கூவுகிறது.

ஆவி மறைந்துவிடுகிறது.

மூவரும் வழி மறித்து தடுக்கத்தான் முயற்சித்தார்கள். காற்றைப் பிடித்து கட்டிவைக்க முடியுமா?

இந்த அதிசயத்தை இளைய ஹாம்லெத்திடம் சொல்லுவதென்று தீர்மானமாகிறது.

2

இளைய ஹாம்லெத் உலகக் கவலை இல்லாமல் வூர்ட்டெம்பெர்க் சர்வகலாசாலையில் வாசித்துக் கொண்டிருந்தான். தந்தையின் மரணச் செய்தி வந்தது. மணி முடியின் பொறுப்பை ஏற்க சம்மதமில்லாதபடி திரும்பி வந்தான். வரு முன்னமே சிற்றப்பன் கிளாடியஸ் சிங்காதனமேறிவிட்டான். தாயார் அவனை அலங்கோல அவசரத்தில் கலியாணம் செய்துகொண்டு விட்டாள். ஹாம்லெத்துக்கு தந்தையின் மரணத்தைப்பற்றி சர்வ சந்தேகம். கொலையா, யார் கொன்றிருப்பார்கள்? கிளாடியஸ் கொலைகாரனுல் தன்னிடம் ஏன் இவ்வளவு பரிவு காட்ட வேண்டும். துரிதக் கலியாணம் செய்து கொண்டாலும் தாயார் பாசம் குறையவில்லை. ஆனல்

அவனுக்கோ சர்வ சந்தேகமாக இருந்து வந்தது. ஒன்றும் புரியவில்லை. புரியாத புதிர்களும் தெரியாத எதிரிகளும் அவன் மனசை வாட்டிக் கொண்டிருந்தன.

இந்த ராஜ்யத்துக்கு பிரதான மந்திரி பொலோனியஸ் என்ற கிழவன். உடல் நைந்தது போல், விவேகமும் நைந்துவிட்டது. அடிக்கடி ஞாபகப்பிசகு, தொடர்ச்சியாகப் பேசிக்கொண்டிருக்கும்போதே என்ன பேசினோம் என்பது மறந்துவிடும். ஆனால் மனசில், தன்னை அபார சாணக்கியன் என்று நினைத்துக்கொண்டு, தான் இல்லாவிட்டால் டென்மார்க் ராஜ்யமே அழிந்து போய்விடும் என்ற மனப்பால் குடித்து தனக்கு வேண்டாத காரியங்களில் எல்லாம் தலையிட்டுக் கொள்ளுபவன். எல்லாவற்றிலும் சர்வ சந்தேகம்.

இவனுக்கு ஒரு மகனும் மகளும் உண்டு. மகன் பெயர் லேயர்டிஸ், மகள் பெயர் ஓபீலியா. ஓபீலியா, சாதுக் குழந்தை; உலகம் அறியாதவள், வெளுத்ததெல்லாம் பால். ஆனால் லேயர்டீஸ் இதற்கு மாறானவன். விவகாரம் தெரிந்தவன், நினைத்த காரியத்தை செய்வதற்கு சற்றும் தயங்காதவன். எது சரி என்று அவனது புத்திக்குப் பட்டதோ. அதை செய்து முடிக்க என்ன விதமான பாஷையானாலும் அதைக் கையாளுபவன். ஓபீலியாமேல் இளைய ஹாம்லெம் காதல் வைத்திருப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை.

பெரிய இடத்துப்பாசம் கெடுதலையே விளைக்கும் என்றும் ஏமாந்துவிடாதே என்றும் தங்கைக்கு புத்தி சொல்லுகிருன். பிரான்ஸுக்குப்போக வேண்டும் என்று லேயர்டிஸுக்கு ஆசை. தகப்பனை வற்புறுத்தி அனுமதி பெற்றுக்கொண்டு புறப்பட்டு விடுகிருன். தகப்பனே, பாரிஸில் போய் எப்படி கெட்டலையப்போகிருனே என்று அவனது நடவடிக்கைகளை வேவு பார்க்க அந்தரங்கமாக வேறு ஒருவனை அனுப்புகிருன்.

3

தகப்பனர் மாண்ட துக்கத்திலிந்து தெளியாத இளைய ஹாம்லெத்துக்கு, கோட்டை மதிலில் ஆவி நடமாடுவதைப்பற்றி அவனது நண்பர்கள் அந்தரங்கத்தில் வந்து தெரிவிக்கிருர்கள். மனசில் ஏற்கனவே பலவிதமாக சங்கடப்பட்டுக்கொண்டிருக்கும் ஹாம்லத்துக்கு இது புதிரை விளக்க வந்த புதுப்பாஷைபோலத்தெரிகிறது. நண்பர்கள் மார்ஸெலஸ், பெர்ஞடோ, ஹொரேஷியோ ஆகியோருடன், நடுநிசிக் காவலுக்குச் செல்லுகிருன். பழையபடி அதே நேரத்தில், அதே உருவம் தோன்றுகிறது. ஹாம்லெத் தொடருகிருன். தான் இம்மண்ணுலகில் நடமாடியபோது தனக்கு நிகழ்ந்த கோர முடிவை ஆவி, அவனிடத்தில் வர்ணிக்கிறது. இப்பொழுது மன்னனுக மணி முடி தரித்திருக்கும் தனது சகோதரனை கிளாடியஸ், உத்தியானவத்தில் தான் சற்று அயர்ந்திருக்கையில், காதில் விஷத்தை

ஊற்றி சாகடித்து விட்டதாகக்கூறுகிறது. ராணி ஜெர்ட்ரூடின் கள்ளக்காதல் 'வைத்த தீ, இந்தக் கொடுமையில் வந்து விடிந்ததாகவும் பழி வாங்கி விடவேண்டும் என இளைய ஹாம்லெத்திடம் சத்தியம் வாங்கிவிடுகிறது.

பேயைக்கண்டு திரும்பிய இளைய ஹாம்லெத் சித்தம் அதிர்ந்து விடுகிறது. பேயிடம் பேசிவிட்டு திரும்பிய நண்பர்களிடம் நடந்ததைச் சொல்ல மறுத்துவிடுகிறான். ஆனால் இந்த விவகாரத்தைப்பற்றி ஒருவார்த்தை மூச்சு விடக்கூடாது என்று சத்தியம் வாங்கி விடுகிறான். டென்மார்க் ராஜ்யமே தன்னை எதிர்த்து நிற்பதாக மலைக்கிறான், ஹாம்லெத்; அவன் எப்பொழுதுமே படிப்பிலும் நினைப்பிலும் பொழுதைக் கழித்தவன். செயலில் இறங்குவது என்பது இரத்தச் செடி வீசும் பாதையில் நடப்பது என்பது மனசை கிடுகிடுக்க வைக்கிறது. ஆனால் இந்தக் காரியத்தை நடத்தித்தான் தீர வேண்டும் என்று ஏதோ ஒரு உள் தூண்டுதல் அவனை உந்தித் தள்ளுகிறது. 'இந்த உலகைச் சீர்படுத்த என்னை ஏன் படைத்தாய்' என்று ஏங்குகிறான்.

கிளாடியஸ்தான் கொலை செய்தவன். ஆனால் அவனும் ஒரு விதத்தில் கோழை. முதலில், ஜெர்ட்ரூட் மேலிருந்த அபார மோகம், அதைத் தொடர்ந்து, சிங்காதனம் வரை தனது ஆசை விரித்த நடைபாவாடை, பழைய

மன்னனை விஷம் வைத்துக் கொல்லும்படி செய்துவிட்டது. கொன்ற பிற்பாடு மனசில் நிம்மதி கிடையாது. ஜெர்ட்ரூட் காட்டும் அன்பு தான் மனத் தணலுக்கு ஒரு ஆறுதலாக இருந்து வருகிறது. முதலில் கொலை செய்யும்போது இளைய ஹாம்லெத்தைப்பற்றி பிரமாதமாக நினைக்கவில்லை. அவன் துக்கப் போர்வை போர்த்து, கவலைச்சிலுவையைச் சுமந்து வருவது வேஷமோ என்று சந்தேகிக்கிருன். சிறு போதில் இளைய ஹாம்லெத்தின் பள்ளிக்கூட சகாக்களும் அரண்மனை வாழ்வின் சீலைப் பேன்களுமான ரோஸன் கிராண்ட்ஸ், கில்ட்டன்ஸ்டர்ன் என்ற இருவரை, இளவரசனுடைய நடமாட்டங்களைக் கவனிக்க வேவு அனுப்புகிருன்.

ஜெர்ட்ரூட் யாரையும் நம்புகிறவள். அவளு டைய வாழ்விலே, ஏற்பட்ட கள்ளக் காதல்தான் அவள் செய்த தப்பு. மன்னன் ஹாம்லெத்தின் திடீர் மரணம், காதலை ஒளித்து வைத்துக் கஷ்டப்பட்டுக்கொண்டிராமல், உலகம் ஒப்ப மணப்பாதை காட்டியதாகவே கருதுகிருள். மன்னன் கொலை செய்யப்பட்டதாக அவளுக்கு தெரியாது, அவ்வாறு சந்தேகிக்கவே இல்லை, சந்தேகிக்கவும் திறம் கிடையாது. அவசரக் கலியாணத்துக்கு முதலில் தயங்கிளுலும், அவளது ஆசையும் கிளாடியஸின் வற்புறுத்த லும் அவளை இணங்க வைத்துவிட்டன. கிளாடி யஸின் மீது எவ்வளவு அபார மோகம் இருக் கிறதோ, அதேமாதிரி, ஒரே மகனை இளைய

ஹாம்லெத் அவள் கண்ணுக்கு கண்ணனபிள்ளை. மகன் மேல் அவளுக்கு சொல்லுக்கு மீறிய வாஞ்சை. இளைய ஹாம்லெத்தின் துக்கத்தைப் போக்கி மனசை தெளிவிக்க என்னவெல்லாம் செய்யலாமோ அதை முயலுகிறுள்.

பேயைக் கண்டுவிட்டு ஹாம்லெத் அந்த அலங்கோலமும், அதிர்ச்சியும் நீங்காமல், தன் காதலியைப்பார்க்க வருகிறுன். தனது காரியத்தைச்சாதிக்க காதலையும் துறக்க வேண்டும் என்று மனசு சொல்லுகிறது. கடைசி முறையாக அவளைப் பார்த்துவிட்டுப்போக வருகிறுன். அதிகமாக பழக்கம் வைத்துக்கொள்ளக்கூடாது, என்று தடுக்கப்பட்ட ஓபிலியாவுக்கு இவனது வருகையும் பார்வையும் முழியும் திடுக்கிட வைக்கிறது. தன் தகப்பனுரிடம் ஓடோடியும் வந்து சொல்லுகிறுள். நம் நாட்டில் கைகூடாக்காதலை உலகுக்கு அறிவிக்க மடலேறும் பழக்கம் இருந்ததுபோல அங்கே அக்காலத்தில், நிராகரிக்கப்பட்ட காதலன், அலங்கோலமாக உடை தறித்து பித்துக்குளி மாதிரி தன் காதலை எடுத்துக்காட்டி, இறக்கும்படி செய்விக்க, காதலி முன் வருவது என்ற ஒரு சம்பிரதாயம் இருந்து வந்தது. ஹாம்லெத்துக்கு காதல் பைத்தியந்தான் ஏற்பட்டுவிட்டது என்று பொலோனியஸ் நிச்சயப்படுத்தி விடுகிறுன். மன்னன் சமுகத்துக்கு தன் மகளுடன் சென்று தான் கண்டு பிடித்ததை அறிவிக்கிறுன்.

# 4

இந்த நிலையில் கிளாடியஸின் தூண்டில் முள்களான கில்டன்ட்ஸ்டர்னும், ரோஸன் கிரான்ட்ஸ‌ும் இளைய ஹாம்லெத்திடம் பேச்சுக் கொடுத்துப் பார்க்கிறார்கள். அவன் அவர்களை கிண்டல் பண்ணுகிறான். அவன் பேச்சில் பைத்தியத்தின் கமரல் அடிக்கிறது. புதிர்போன்ற அவனது வார்த்தைகள், அவர்களை உள்ளத்தைத் தொளைக்கவேண்டும், ஆனால் மரத்துப்போன மடங்களுக்கு அது புரியவில்லை, ஆனால் இரகசியத்தை மட்டும் சொல்லமாட்டேன் என்கிறானே என்ற கொதிப்பு, இந்தச்சமயம் பார்த்து தேசாந்திரியான நாடகக் கோஷ்டி ஒன்று அங்கு வருகிறது. ஹாம்லெத்துக்கு மின்வெட்டுவது மாதிரி ஒரு யோசனை தோன்றுகிறது. தன் தகப்பனாரின் கொலையை நாடகமாகத்தயார் செய்து கிளாடியஸ் முன் ஆடினால்.......? நாடகந்தான் சரி, அதுதான் மன்னன் மனச் சாட்சியைப் பிடிக்க அதுதான் சரியான தூண்டில்.

இளைய ஹாம்லெத்துக்கு பிசாசு சொன்ன வார்த்தைகளின்மேல் கூட அவ்வளவு சந்தேகம். ஒருவேளை தன்னைப் பாழ்படுத்த சாத்தானின் சாபமோ என்று சந்தேகம். அதனால்தான் அவன் மனசு கிடந்து அலைமோதுகிறது. நாடகக்காரர்களின் வருகை, தெய்வமே தனக்கு வந்து காட்டிய வழிபோலத் தோற்றுகிறது. பழி வாங்குவது

பற்றி ஊசலாடும் உள்ளத்தானாகிய இளைய ஹாம்லெத் முயன்ற முயற்சி இது ஒன்றுதான். மற்றப்படி தர்மதேவதை ரத்த சாந்தியை நோக்கிச் செல்லும் பாதையில் அவன் சிக்கி இழுபடுகிறான். அவ்வளவுதான்.

## 5

இந்த நிலையில் வேவுகாரர்கள் வந்து, வேலை தங்கள் சக்திக்கு மீறியது என்பதைச் சொல்லுகிறார்கள். இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது பொலோனியஸ் வருகிறான். இளைய ஹாம்லெத்துக்கு காதல் பைத்தியமானதா அல்லவா என்பதை பரீட்சிக்க சமயம் ஏற்றதாக இருக்கிறது என்பதை சொல்லுகிறான். ஓபிலியாவை தனி இடத்தில் உட்கார வைத்துவிட்டு மன்னனும் மந்திரியும் ஒளிந்து கொள்ளுகிறார்கள். இளைய ஹாம்லெத் அந்தப் பக்கமாக வருகிறான். ஓபீலியா அவனிடம் பேச்சுக் கொடுக்கிறாள். தனது ரகசியத்தைக் கண்டுபிடிக்க இது ஒரு வலை என்பது அவனுக்குத் தெரியும். முரட்டுத்தனமாக அவளிடம் பேசுகிறான். பேச்சில் பித்தம் தெறிப்பதாகவே ஓபீலியா எண்ணுகிறாள். அவளுக்கு வேறு எந்தமாதிரி தெரியும். தனக்கு வீசப்பட்ட வலையில், கவர்ச்சிப் பொருளாக அளவிட முடியாத மதிப்பு வைத்திருந்த தனது ஆசைக்கு உகந்தவளே இருக்கிறாள் என்பதில் ஹாம்லெத்துக்குக் கோபம். 'உன் தகப்பனை வீட்டுக்குள் போட்டுப் பூட்டிவை; அவன் மடமை வீட்டோடேயே அடங்கட்டும்' என்று

அவன் சொல்லுவதின் பொருள் அவளுக்கு புலப்படவில்லை.

கிளாடியஸுக்கு, இது காதல் வெறி அல்ல என்பது புரிந்துவிட்டது. இளைய ஹாம்லெத்துக்கு பைத்தியமே கிடையாது; அவன் ரகசியத்தில் ஏதோ சதி செய்கிறான். வேற்றாருக்கு அனுப்பிவிட்டால் நலம் என்று நினைக்கிறான்.

கொலை அட்டூழியம்பற்றி எதுவும் அறியாத பொலோனியஸுக்கு இது காதல் பைத்தியந்தான் என்ற உறுதியான நினைப்பு. தாயாரைக் கொண்டு கண்டிக்கச் சொல்லுவோம்; அதன் மூலம் ரகசியத்தைக் கண்டுபிடிப்போம். என்கிறான்.

## 6

நாடகம் டென்மார்க்கில் நடந்த கொலைதான். கொன்ஸாலோ என்ற ட்யூக், அவன் மனைவி பெயர் பாப்டிஸ்டா. லூஸியானஸ் என்ற உறவினன், ட்யூக் உத்தியானவனத்தில் உறங்கும் போது காதில் விஷம் ஊற்றிக் கொல்லுகிறான்.

இந்த நாடகத்தை கிளாடியஸ், ராணி, ஹாம்லெத், ஹொரேஷியோ, ஓபீலியா, பொலோனியஸ் யாவருமே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த கட்டம் வந்ததும் மன்னனுக்கு புரிந்து விடுகிறது. 'விளக்கு, விளக்கு' என்று சொல்லிக்கொண்டே இடையில் எழுந்து புறப்பட்டுச் சென்றுவிடுகிறான். 'நெருப்பு என்று

சொன்னால் உடம்பு பத்திக்கொண்டு விடுமா' என்று சிரிக்கிறான் ஹாம்லெத். 'அம்பு பட்ட மான் எங்கே போய் விழுகிறதோ' என்கிறான் ஹொரேஷியோவைப் பார்த்து.

சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு 'நாம் கண்ட பேய் யோக்கியமான பேய் தானப்பா?' என்கிறான்.

அதற்குள் கில்டன்ஸ்டர்னும் ரோஸன் கிரான்ட்ஸும் வந்து சேருகிறார்கள். 'மகாராஜா மகா கோபமாக இருக்கிறார்; ராணிக்கு ஆத்திரமும் ஆச்சரியமுமாக இருக்கிறது; ராணியார் உங்களை வரச் சொன்னார்கள்' என்கிறார்கள்.

கில்டன்ஸ்டர்ன் அவனைத் தொளைத்துத் தொளைத்து ரகசியம் என்ன என்று தெரிந்து கொள்ள முயலுகிறான்.

ஹாம்லெத்துக்கு கோபம் வந்துவிடுகிறது. அவன் கையில் ஒரு குழலைக் கொடுத்து 'இதை வாசி' என்கிறான்.

'எனக்குத் தெரியாதே' என்று சொல்லுகிறான் கில்டன்ஸ்டர்ன்.

'சும்மா ஊதிப்பாரு: துவாரங்களில் விரலை வைத்து அழுத்திக்கொண்டு காற்றை ஊத வேண்டியதுதானே' என்கிறான் ஹாம்லெத்.

'அது இசையாக இருக்காதே.'

'இந்தக் குழலை பேசவைக்க முடியாதவனு என்னைப் பேச வைத்துவிடப் போகிருய், அதை விட நான் மட்டமானவனு' என்று அதட்டு கிருன்.

அந்தச் சமயத்தில் பொலோனியஸ் வந்து, தாயார் ஹாம்லெத்தை அழைப்பதாக சொல்லி விட்டுப் போகிருன்.

7

ராணியை சந்திப்பதற்கு இளைய ஹாம்லெத் வருகிருன். வழியிலே கிளாடியஸ் தெய்வத்தை நோக்கி அல்லாடும் மனதுடன் பிரார்த்தனை செய்துகொண்டிருப்பதைப் பார்கிருன். கடவுளை நோக்கி நின்று மன்ருடுபவனைக் கொல்லுவதா, கூலிக்கு கத்தி தூக்குபவன் அல்ல என்று நினைத் துக்கொண்டு கிடைத்த சந்தர்ப்பத்தை தவற விட்டு தாயார் இருக்கும் இடத்தை நோக்கிச் செல்லுகிருன்.

மகனிடம் கண்டித்துப்பேசி மனசில் உள்ள தை அறிய வேண்டும் என்று யோசனை சொல் லிக்கொண்டிருந்த பொலோனியஸ், திரைக்குள் மறைந்துகொள்ள, தாயார், மகனை உள்ளே வரும்படி அழைக்கிருள்.

இளைய ஹாம்லெத் பித்துக்குளிமாதிரி வார்த்தைக்கு வார்த்தை ஏறுக்குமாருகப் பேசுகிருன்.

திறைக்குப்பின் சிறிது சப்தம் கேட்கிறது. "எலி. எலி." என்று சொல்லிக்கொண்டே கத்தியைச் சொருகி விடுகிருன். திறைக்குப்பின் அவன் எதிர்ப்பார்த்தது மன்னன்; ஆனல் மாண்டு கிடந்தது மந்திரி.

ஆத்திரம் பொங்க தன் தந்தை எப்படி, மன்னன் எப்படி என்பதை வேறுபடுத்தி வர்ணிக்கிருன். ஆவேசம் கொண்ட அவனது மனசுக்கு தந்தையின் உருவெனத் தோற்றம் தெரிகிறது. அது அவலிடம் பேசுகிறது. அவனைத் தூண்டுகிறது. ஹாம்லெத்தின் பேச்சு ஜன்னி வேகத்தில் செல்லுகிறது. கிளாடியஸை திருடன், கொலைகாரன், மணிமுடியைத் திருடி அடிமடியில் ஒளித்துக்கொண்டவன் என்று வைகிருன்.

ஆனல் ராணி தன் மகனுக்கு பைத்தியம் தான் என்று நினைக்கிருள்.

"எனக்கு பைத்தியம் இல்லை, தந்திரக்காரப் பைத்தியம் என்று வைத்துக்கொள், உன் மன்னனிடம் வேண்டுமாளுல் சொல்லு, என்னை வேற்றூருக்கு அனுப்ப யோசனை ஆகியிருக்கிறது. தெரியுமா?" என்று சொல்லிவிட்டு பொலோனியஸ் சடலத்தை இழுத்துக்கொண்டு போகிருன்.

## 8

பொலோலியஸ் உடம்பை ஹாம்லத்திடமிருந்து வாங்குவதற்குள் பெரும்பாடாகி

விட்டது. அதை அவசர அவசரமாக இரண்டாம் பேருக்குத் தெரியாமல், புதைக்க ஏற்பாடாகிறது. ஹாம்லெத்தை இங்கிலாந்துக்கு அனுப்பி விட விரும்பிய மன்னனுக்கு இந்தக்கொலை, பாதையை செளகரியமாக்குகிறது. கில்டன்ஸ்டர்ன், ரோஸன்கிராண்ட்ஸ் இருவருடைய பாதுகாப்பில் ஏதோ ஒரு கொள்ளைச்சாக்கைச் சொல்லி அவனை அனுப்பி விடுகிறான். கடிதம் கொண்டு வருவோரை விசாரிக்காமல் தீர்த்துவிட வேண்டும் என்பது இங்கிலாந்திலிருப்பவர்களுக்கு தாக்கீது. ஆனால் கொலைக்காக, ஹாம்லெத்தை நாடுகடத்தி விட்டதாக ஜனங்களை சாந்தம் செய்ய வெளிப் பகட்டு.

இங்கிலாந்துக்குப்போகும் பாதையில், நார்வே மன்னனுடை மருமான், பயனற்ற மண்ணைப்பிடிக்க போலந்தை நோக்கி படை திரட்டிப்போவதை பார்க்கிறான். நாலு காசு பெறாத மண், ஆனால் எத்தனை ஆர்ப்பாட்டம். போலந்துக்காரனும் படைதிரட்டிக்கொண்டு நிற்கிறார்களாம். வெறும் ஒட்டைப்புகழுக்கு உயிரைவிட அத்தனை பேர்; தகப்பன் கொலைப் பழியைத்தீர்க்க அத்தனை தயக்கம். தன்னையே உறுதிப்படுத்திக் கொள்ளுகிறான் ஹாம்லெத்.

## 9

தகப்பன் திடீரென்று கொல்லப்பட்டது; அதுவும் தன்னைக் காதலித்தவராலே கொல்லப் பட்டது, ஒபீலியாவின் மூளையைக் கலக்கி விடு

கிறது. வாழ்வில் தந்தையையும் தமயனையும் உற்றவலமாக நம்பி வந்தவள். உலகின் கொடூர சாயைகள் விழாமல் காப்பாற்றக்கூடியவர்களில் ஒருவர் மாண்டார். மற்றவனோ பாரிஸிலிருக்கிறான். நிர்க்கதியாகிவிட்டதாக நினைத்து வெருண்டு போன ஒபீலியா, பைத்தியம் பிடித்து அலைகிறாள். எப்பொழுது பார்த்தாலும் தகப்பனைப்பற்றியே ஜெபம், அவன் அந்தி மக்கிரியைகளைப் பற்றியே பாட்டு, அதிலே நசுங்கி முறிந்த காதலின் துன்பச் சோபை அடிக்கிறது.

லேயர்ட்டீஸ் அந்தரங்கமாக டென்மார்க்குக்கு வந்துவிட்டான். தகப்பனார் துர்மரணம் அவனுக்கு எட்டிவிடுகிறது. கோபாவேசனாக வருகிறான். டென்மார்க் ஜனங்கள் முணுமுணுக்க ஆரம்பித்து விட்டார்கள். முதலில் பெரிய ஹாம்லெத் மரணம், பிறகு அவசர கலியாணம், அவசரப்பட்டாபிஷேகம், பிறகு பிசாசு நடமாட்டம், இளைய ஹாம்லெத் பைத்தியம். பொலோனியஸ் மரணம், ஹாம்லெத் நாடுகடத்தப்படல்,—ஜனங்களுக்கு சந்தேகம் பலமாகிறது. எப்பொழுதுமே கிளாடியஸை பிடிக்காது. 'லேயர்ட்டீஸே மன்னன்' என்று கோஷித்துக் கொண்டு கும்பல் அவன் பக்கம் சாய்ந்து விடுகிறது. நாட்டில் புரட்சி ஏற்பட்டுவிடும் போலிருக்கிறது. மணி முடி தலையுடன் சிதறி விழுந்து விடுமோ என்று பயப்படுகிறான் கிளாடியஸ்.

கதவு உடைபடுகிறது. கோபாவேசனுக லேயர்டிஸ் தந்தையின் உயிருக்கு உத்தரம் சொல்லும்படியாக கொதித்துக்கொண்டு பிர வேசிக்கிருன்.

அரண்மனையிலுள்ளவர்கள் நடுநடுங்குகிருர் கள். ஆனல் கிளாடியஸ் நிதானத்தை இழக்க வில்லை, லேயர்ட்டீஸ் குணம் அவனுக்கு மனப் பாடம். அவனுடைய கோபத்துக்குப்போக்குக் காட்டிவிட்டால், கைப்பொம்மை. கிளாடியஸ் அவனிடம் பேச்சுக் கொடுத்து சமாதானம் செய்ய என்ன வழி என்பதை மனசிற்குள் யோசித்துக்கொண்டிருக்கிருன்.

மறுபடியும் வாசலில் பேரிரைச்சல் கேட் கிறது. சித்தம் கலங்கிய ஒபீலியா பிரவேசிக் கிருள். லேயர்ட்டீஸ் மனசு கொதிக்கிறது. பசலை, அவளை இக்கதிக்கு கொண்டு வந்து விட்டார்களே. ஒபீலியா அவனை அடையாளம் கண்டுகொள்ளவில்லை. அவள் ஏதேதோ பிதற் றிக்கொண்டு பாடுகிருள். நிதான புத்தியுடன் நீசத்தனத்துக்கு வஞ்சம் தீர்க்கும்படி அவள் நின்று தூண்டுவதைவிட, அவள் நின்ற நிலையே கோபத்துக்கு கூர்மை கொடுக்கிறது.

ஆனல் கிளாடியஸ் சமயோசிதமாக 'குற்ற முள்ள பக்கத்தில் உன் கோபத்தணல் விழட்டும்" என்று சமாதானப்படுத்தி விடுகிருன்.

"என்னை நீ மன்னிக்கவேண்டும். மகாராணி பேரில் நமக்கு அத்யந்த பிரீதி. அவளுக்கோ அசட்டுத்தனமானதொரு புத்திர வாஞ்சை. நான் என்ன செய்யட்டும். விஷயத்தை முழுவதும் கேள். உன் தகப்பனூர் என்றால் என் கண்ணுக்கு கண், இருந்தாலும் அவருக்காக, உலகிற்குப் போக்குக்காட்ட தண்டனையை நாடு கடத்துவதாக மாற்றினேன்......" என்று சமாதானப்படுத்துகிறான் கிளாடியஸ்.

"அதனால் நான் என் தகப்பனாரை இழந்தேன், உயிருக்குயிரான தங்கை சித்தம் கலங்கி திரிகிறாள்" என்கிறான் லேயர்ட்டீஸ்.

"அதுமட்டுமா? முழுவதும் கேள்......யார் அது, என்ன கடுதாசி?" வாங்கி வாசிக்கிறான் கிளாடியஸ்.

மன்னன் முகம் கருக்கிறது. கடிதம் ஹாம்லெத்திடமிருந்து: "தன்னந்தனியனாக இங்கு திரும்பி வந்துவிட்டேன். நாளைக்கு தங்களை நேரில் சந்திக்க வேண்டும். அப்பொழுது தங்களுக்கு நான் திரும்பி வரவேண்டி ஏற்பட்டதை விவரிக்கிறேன்."

கடிதத்தை லேயர்ட்டிஸிடம் கொடுத்து வாசிக்கச் சொல்லுகிறான். படிப்படியாக அவனை வசப்படுத்தி கத்திச் சண்டையில் விஷம் வைத்த

கத்தி கொண்டு குத்தி வஞ்சம் தீர்த்துக்கொள்ளும்படி தூண்டுகிறான்.

அந்தச் சமயத்தில், ஓபீலியா, ஒரு நீரோடையில் தவறி விழுந்து உயிர்துறந்தாள் என்ற தகவல் வருகிறது.

## 11

துர்மரணத்துக்கு ஆளானவர்களுக்கு அந்திமக் கிரியைகள் ஒருமாதிரி கிருஸ்துவச் சடங்குகள் யாவும் நடைபெறாது. ஓபீலியாவுக்கும் அதேமாதிரிதான் நடக்கிறது.

அவளுக்காக சமாதிக் குழியைத் தோண்டிக் கொண்டிருக்கும் இடத்தருகில் வந்த பிறகுதான் ஹாம்லெத்துக்கு ஓபீலியாவின் மரணம் தெரிய வருகிறது. ஹாம்லெத்தும் ஹொரேஷியாவும் தான் அங்கே வருகிறார்கள்.

அல்லாடும் மனசினனான ஹாம்லெத் வேதாந்தம் பேசுகிறான். பிரேத ஊர்வலம் வருகிறது.

சவச் சடங்கு நடக்கிறது. தூரத்தில் நின்றிருக்கும் ஹாம்லெத் லேயர்ட்டஸை அடையாளம் கண்டுகொள்ளுகிறான்.

இதற்குமேல் துர்மரணத்துக்கு ஆளானவர்களுக்கு சடங்கு கிடையாது என்று பாதிரி மறுக்கிறார்.

மன உளேச்சலுடன் ‘ இன்னும் ஒரு பிரார்த்தனே கீதம், அவளது ஆத்மா சாந்தியடைய’ என்று மன்ருடுகிருன்.

பிரேதத்தை எடுத்து குழிக்குள் கிடத்துகிருர்கள். அப்பொழுதுதான் ‘ஓபீலியாவா’ என்று திடுக்கிடுகிருன் ஹாம்லெத்.

‘என் மகனுடன் மணவினேயை எதிர்பார்த்தேன், மண் அள்ளி போடத்தான் கொடுத்து வைத்திருந்தது’ என்று சொல்லி ராணி ஒரு பிடி மண்ணே குழிக்குள் தூவுகிருள்.

இனிமேல் மண்போட்டு மூடி விடுவார்கள். ஓபீலியாவின் முகம் மண்ணேடு மண்ணுக மக்கி மடிந்துவிடும். லேயர்ட்டீஸுக்கு, மண்போட்டு மூடுவதை பார்க்க சகிக்கவில்லே. ‘ இன்னும் ஒரு முறை முகம் பார்க்கிறேன்’ என்று சொல்லிக் கொண்டு குழிக்குள் இறங்கியவன், ‘என் மேலும் மண்ணேப் போட்டு மூடிவிடுங்கள்’ என்று அலறுகிருன்.

திடீரென்று நெருங்கிவந்து குழிக்குள் குதிக்கிருன் ஹாம்லெத். என்னுடைய துக்கத்துக்கு சமம் உனக்குண்டா? ஏன் கத்துகிருய். நான் தான் ஹாம்லெத் என்று கத்துகிருன். லேயர்ட்டீஸ் அவன் கழுத்தை எட்டிபிடித்து நெருக்குகிருன். இரண்டுபேரும் அடித்துக் கொள்ளுகிருர்கள். இடையிலிருந்தவர்கள் இரு

வரையும் பிரிதது சமாதானப்படுத்தி வெளியேற்றுகிறார்கள்.

## 12

இளைய ஹாம்லெத் கப்பலில் இங்கிலாந்துக்குப் போகும்போது மன்னனுடைய துரோகத்தைப் பார்க்கிறான். எழுதியிருந்த கடுதாசி அவனைத் தீர்த்துவிடும்படி இருந்தது. அதை எடுத்துவிட்டு வருகிற இருவரையும் தீர்த்துவிட வேண்டும் என்று மாற்றுக் கடுதாசி எழுதி வைக்கிறான். மறுநாள் கப்பல் கொள்ளைக் காரர்கள் இவன் சென்ற கப்பலைத் தாக்குகிறார்கள். அந்தக் கப்பலில் தொத்தி ஏறி, கள்ளர்களுக்கு இணக்கமாக இருந்து தப்பித்து டென்மார்க் வந்து சேருகிறான்.

இதுதான் அவன் திரும்பி வந்த கதை. நண்பன் ஹொரேஷியோவுக்கு இதை வர்ணித்துக்கொண்டிருக்கும்போது கத்திச் சண்டைக்கு சவால் வருகிறது. ஹாம்லெத்துக்கு அவ்வளவு கத்திச் சண்டை தெரியாது. இருந்தாலும் அங்கீகரிக்கிறான்.

கிளாடியஸ், ராணி, ஹொரேஷியோ, மத்யஸ்தகர் ஆகியோர் முன்னிலையில் கத்திச் சண்டை ஆரம்பமாகிறது.

ஒருவன் கையில் விஷக்கத்தி, மற்றொருவன் கையில், திறமை இன்மை.

"ஒயின் எடுத்து வை" என்று உத்தரவிடுகிறான் கிளாடியஸ்.

ஹாம்லெத் முதல் ரவுண்டில் எதிரியைக் காயப்படுத்தி விடுகிருன். வெற்றி முழக்கப் படுகிறது.

"உன் வெற்றிக்கு" என்று மன்னன் குடிக்கிருன். "நம்மகனுக்கே வெற்றி" என்கிருன்.

"மூசு மூசென்று இளைப்பு வாங்குகிறதே, இந்த கைக்குட்டையை எடுத்து முகத்தை துடைத்துக்கொள், இதோ உன் வெற்றிக்காக" என்று ஒரு பாத்திரத்திலிருந்த ஒயினைக் குடிக்கிருள் ராணி.

"போச்சு, விஷத்தை குடித்துவிட்டாள்" என்று முனங்குகிருன்.

"அப்புறம் தாகம் தீர்த்துக்கொள்ளுகிறேன்" என்று சண்டை போடுகிருன். சண்டை சூடு பிடிக்கிறது.

கனவேகத்தில் மோதிக்கொண்டு மல்லாட இருவருக்கும் காயம் படுகிறது. அதே சமயத்தில் ராணி கீழே விழுகிருள்.

"ரத்தத்தைக் கண்டு மயக்கம்" என்கிருன் கிளாடியஸ்.

"குடிக்காதே. விஷம். விஷம்" என்று கொண்டே உயிர் துறக்கிருள்.

"துரோகம், துரோகம், தாளையடை" என்று கர்ஜிக்கிருன் ஹாம்லெத்.

"ஆமாம் துரோகந்தான். மன்னனே துரோகி, அவன் வலையில் சிக்கினேன். என்

வினை என்னையே கடித்துவிட்டது. நீயும் தப்ப மாட்டாய், நானும் தப்பமாட்டேன்; விஷம் வைத்த கத்தி" என்கிருன் லேயர்ட்டீஸ்.

"விஷமா. விஷமே, உன் வேலையைச் செய்" என்று மன்னனையும் குத்துகிருன் ஹாம்லெத்.

"மீதியிருக்கும் விஷத்தைக் குடித்து ராணியைத் தொடர்ந்து செல்" என்று கர்ஜிக்கிருன் ஹாம்லெத்.

மன்னனும் லேயர்ட்டீஸூம் மடிகிருர்கள்.

"என்னையும் காலன் கூப்பிடுகிருன்" என்று சோர்கிருன் ஹாம்லெத்.

"நானும் வருகிறேன், இதோ மீதி விஷம் இருக்கிறது" என்று எடுக்கிருன் ஹொரேஷியோ.

"மனுஷனைப்போல் நடந்துகொள், உலகிற்கு என் துயரக் கதையைச் சொல்," என்றபடி ஹாம்லெத் ஆவி பிரிகிறது.

அன்று தர்ம தேவதை ஒரு துரும்பை வைத்து பழி தீர்த்துக்கொண்டது.

போலந்தின் வெற்றிபெற்ற பான்டிஸ்பிராஸ் வருகைக்காக டென்மார்க் சிங்காதனம் காலியாயிற்று.

கில்டன்ஸ்டர்னும் ரோஸன்கிரான்ட்ஸூம் செத்தார்கள் என்ற ஓலையுடன் தூதனும் வருகிருன்.

மரணம் பலதிறப்பட்ட மக்களை உண்டு பசி ஆறியது.

# ஹென்ரிக் இப்ஸன் 1828 - 1906

*[ஷேக்ஸ்பியருக்கு சமதையாக உலகம் கொண்டாடும் நாடக சிரேஷ்டர் ஹென்ரிக் இப்ஸன். தர்மத்துக்கு வெற்றியை அளித்தார் ஷேக்ஸ்பியர்: தர்மம் ஏன் வெற்றி பெறவேண்டும் என்ற கேள்வியை எழுப்பியவர் ஹென்ரிக் இப்ஸன். புதுப்பாணியிலே எழும் நாடக சூத்தரத்துக்கு பிதாமகன் இப்ஸன்.*

*இவர் 1828-ம் வருஷம் நார்வே தேசத்தில் உள்ள ஸ்கீப்ஸ் என்ற இடத்தில் பிறந்தார். இந்த மேதைக்கு பிறந்த நாடு முதலில் இடம் அளிக்கவில்லை, இவரது ஆயுளில் பெரும்பாகம் ஜெர்மனியிலும் இத்தாலியிலும் கழிந்தது. தாய்நாடு திரும்புகையில் பெரும் புகழும் பெற்று உலக நாடக சிரேஷ்டராக திரும்பினர். புகழும் பெயரும் கிடைத்தபின் தாய் நாட்டின் பரிவு என்ற நிழலில் கிரிஸ்டினவில் வாழ்ந்தார். 1906 மே 23ந்தேதி மரணம். பிரான்ட், பீட்டர்ஜிஸ்ட், கோஸ்ட்ஸ் என்பவை இவரது நாடகங்களில் பிரதானமானவை.]*

## ராஜ்ய உபாதை (காங்ஸ் எம்னெர்ன்)

நார்வே ராஜ்யத்தை வகிக்க, மணிமுடி தரித்து செங்கோல் ஏந்த, பலர் பாத்யதை கொண்டாடினர்கள். மன்னன் ஹாக்கானை பல சிற்றரசர்கள் ஆதரித்தார்கள். அவனே தமக்கு மன்னன் என்று ராஜ விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொண்டனர். ஸ்கூல் ஒரு சிற்றரசன், ஹாக்கானுடைய சிற்றப்பா. அவனும் ராஜ்யம் தனக்குத்தான்; தானே பட்டத்துக்கு உரிமையுள்ளவன் என்று போட்டியிட்டான். பல வருஷங்களாகவே ஸ்கூல் மனசில், தனக்கே ராஜ்யத்துக்கு நியாயமான உரிமையுண்டு என்ற நினைப்பு. முதல் முதல் எர்லிங் ஸ்டீயன்வீக்கை, ஸ்லிட்டங் வம்சத்தினர் தேர்ந்தெடுத்தபோதே, அந்த ஆசை வேர் விட்டது. ஆனால் அவனுக்கு ஸ்லிட்டங் வம்சத்தினரை எதிர்த்துக்கொள்ள பயம். ஸ்டீயன்வீக் ஆட்சிக்குப் பிறகு ரிப்பங் வம்சத்தினர் பட்டத்துக்கு வந்தார்கள். குத்தார்ம் அரசனானன். அவன் சாகும்வரை ஸ்கூல் காத்திருந்தான். குத்தார்முக்கு சாக்காடு வந்தது. ஆனால் பட்டம் ஸ்கூலுடைய அண்ணனுக்கு வந்தது; அண்ணன் இன்ஜி பார்ட்ஸன் நோயாளி. வியாதிமுற்ற முற்ற ஸ்கூலுக்கு நம்பிக்கையும் முற்றியது. இன்ஜி சாகும்பொழுது மனைவி கருவுற்றிருந்தாள். ஸ்கூலுடைய ஆசைக்கும் அரசுக்குமிடையே அந்தக் குழந்தை தடுத்து நின்றது.

அந்தக் குழந்தையையே அரசனுக ஒரு சிற்றரசுக் கோஷ்டி ஏற்றது. அந்தக் குழந்தைதான் ஹாக்கான். ஹாக்கான் சார்பாக ஸ்கூல் கிறிது காலம் ஆட்சி புரிந்தான். ஹாக்கான் பருவம் எய்தி ஆட்சியை வகிக்கும் காலம் வந்தது. நார்வேயில் ஒரு சம்பிரதாயம். கிற்றரசர்கள் எல்லாம் ஏகோபித்து யாரை மகாராஜாவாக ஏற்கிருர்களோ, அவர்களுக்கே பட்டம் கிடைக்கும். பாத்தியதை பலமும் சிற்றரசு சம்மதமும் வேண்டும். ஸ்கூலும் அவனுடைய சகாக்களும் ஹாக்கான் பட்டத்துக்கு வருவதைஎதிர்த்தனர். பதின்மூன்ரும் நூற்ருண்டின் முற்பகுதியில், நார்வே ராஜ்யம், கத்தி முனையால் பாத்தியதையை உறுதிப்படுத்தும் சிற்றரசுக்கும் பல் குமைந்த கொலைக்களமாகிக் கிடந்தது. கிறிஸ்துவப் பாதிரிமார் மடாலயங்கள் இந்தக் குளறுபடிக்கு ஆதரவு கொடுத்து வளர்த்தது. பரலோக சாவியை தம் கையில் வைத்திருக்கின்றன என பாவிக்கப்பட்ட மடாலயங்கள், இகலோக மன்னர்களின் சிண்டுகளையும் தம் கைவசம் கொண்டு, முடிசூடா மன்னர்களாக ஆட்சிபுரிய முயன்ற தேசத்திலே கிருஸ்துவ தர்மத்தின் பிரதான மடாலயம் ஆஸ்லோ நகரிலிருப்பதாகும். அதன் தலைவராகவும் மன்னர்களின் பிரதான குருவாகவும் இருந்தவர் பிஷப் நிக்கோலாஸ். சிற்றரசர்களை ஒன்றுசேரவிடாமல் அவர்களது மனசில் ஆசைத் தீயை கிளப்பி, ஆதரவு என்ற ஆகுதி வார்த்து, முட்டி மோதிக்கொண்டு

தம் காலடியில் கிடக்கும்படி செய்தார். ஹாக்கான் கட்சியா, அவன் வேண்டுமானால் அக்னிப் பரிட்சையால், தன் பாத்தியதையை நிரூபிக்கட்டுமே" என்றார்.

"சரி, ஹாக்கான் தொலைந்தான், நெருப்பாவது தப்புவதாவது" என்று மனப்பால் குடிக்கிறான் ஸ்கூல்.

பழுக்கக் காய்ச்சிய இரும்பை ஹாக்கானுடைய தாயார் கையில் ஏந்த வேண்டுமாம். நெருப்பின் நாக்கு தாயின் கையை தீண்டாது ஒதுங்கினால், அரசுரிமை அவனுக்கு உண்டு. தாய் இங்கா அக்னிப்பரிட்சைக்கு உடன்படுகிறாள். அக்னியும் அவளைச்சுடவில்லை. ஹாக்கான் இறந்த மன்னனுடைய புத்திரன் என்பதில் சந்தேகமில்லை.-அது அவனுக்கு ராஜ்யத்தின் மீது பாத்யதை கொண்டாட மட்டும் உரிமை கொடுக்கிறதாம்; ராஜ்யத்தை கொடுக்கவில்லையாம். அவளைப்போல் சம பாத்யதை உடைய வம்சங்கள் பலவுண்டாம்.

சிற்றரசுச் சபை கூட்டி முடிவாக யாரை ராஜாவாக்குவது என்பதை தீர்மானிப்பது என்று முடிவு கட்டப்படுகிறது. ஹாக்கான் வாலிபன், தீரன், அழகன்: சீர்குலைந்து கிடக்கும் தேசத்தை ஒரு ஆட்சிக்குட்படுத்தி, ஒழுங்குபடுத்தவேண்டும் என்பதுதான் ஒரே ஆசை.

தேர்தலுக்கும் சம்மதிக்கிறான். ஸ்கூலுக்கும் மற்ற வம்சங்களுக்கும் எதிராக இவனுக்கே ஆட்சிகிடைக்கிறது.

ஹாக்கான் தாராளபுத்தியுடையவன். தேசம் ஒன்றுபட்டு சமாதானமாவதே அவன் ஆசை. எதிரியாக நிற்கும் ஸ்கூலை உறவினனாக்கி, பகைமையை அளிக்க விரும்பினான். ஸ்கூலுக்கு ஒரு மகள் உண்டு. அவள் பெயர் மார்கெரட். ஏற்கனவேதான் ஒருத்திமீது ஆசை வைத்திருந்தும், தேசத்துக்காக அந்தக் காதலை ஒதுக்கி, மார்கெரட்டை மணந்து கொள்ளுகிறான். பாசம் மிகுந்தவர் பக்கத்திலிருந்தால் உறுதி பிறழும் என்று தாயையும் தனி இடத்துக்கு அனுப்புகிறான். கலியாணப் பந்தல் பிரிக்குமுன்பே கலகத் தீயும் கனிய ஆரம்பிக்கிறது. ஹாக்கானுக்கு எதிராக கலகம் செய்து வந்த ஒரு சிற்றரசனுக்கு ஸ்கூல் ஒரு கடிதம் அனுப்புகிறான். முத்திரையிட மன்னனுடைய முத்திரை மோதிரத்தையும் உபயோகிக்கிறான். இந்தச் செய்தி காதில் எட்டியதும் கோபத்துடன் புகுந்து, ஹாக்கான் விவகாரத்தை விசாரிக்கிறான். ஸ்கூலும் படபடப்பாக எதிர்க்க முத்திரை மோதிரம் அவன் வசமிருந்து வாங்கப்படுகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்கிறார் பூஜ்யர் நிக்கலாஸ். ஹாக்கான் ஜனனம் அவன் பிறந்து ஒரு வருஷம் வரை இரகசியமாக காப்பாற்றப்பட்டு வந்தது. போட்டி வம்சம்

சிசுவைக் கொன்றுவிடுமோ என்று இங்கா, இரகசியமாக ஒரு பாதிரியார் வீட்டில் சென்று பெற்றெடுத்து அதை அவர் வசமே விட்டு வந்தாள். பாதிரியாருக்கு ரகசியச் சுமை தாளவில்லை, மடத்தின் அதிபதியான குருவிடம் ஆத்மார்த்தமாக யோசனை கேட்டார். குரு குழந்தைகளை மாற்றி ராஜ குழந்தைக்குப் பதிலாக, வேற்றுக் குழந்தையைக் கொடுத்து விடும்படி யோசனை சொன்னார்......இப்படியாக ஸ்கூல் காதில் பிஷப் நிக்கலாஸ் சந்தேகவித்தை விதைத்தார்.

"அப்பொழுது ஹாக்கான் ராஜபரம்பரையைச்சேர்ந்தவன் அல்லவா?" என்று ஆவலுடன் கேட்டான் ஸ்கூல்.

"பாதிரி சொன்ன யோசனைப்படி நடந்தானோ என்னமோ; சம்பவம் நடந்த பிறகு தன்னைப் பயந்து நாட்டை விட்டு ஓடிவிட்டான். ஆனால் சாகும்பொழுது நடந்த விவரம் முழுவதையும் எனக்கு எழுதி அனுப்பினான்" என்றார் பிஷப்.

"அந்தக் கடிதம்......? என்று கேட்டான் ஸ்கூல்.

அதைத் தேடிக்கண்டுபிடித்தாக வேண்டும்" என்று துடிக்கிறான் ஸ்கூல்.

" அந்தக் கடிதம ஹாக்கான்தான் உண்மை யானவாரிசு என்பதை ஊர்ஜிதப்படுத்தினல்...?"

" ஆசையை அவித்து அடங்கி வாழ்வேன்" என்கிருன் ஸ்கூல்.

" அவனுக்கு பாத்தியதை இல்லாவிட்டாலோ?"

" அப்படியானல் அவன் எனக்கு ராஜ்யத்தைக் கொடுக்கவேண்டும். அவன் எங்கு ஓடினலும், எந்த மாதாக் கோவிலில் தஞ்சம் புகுந்தாலும், துறத்திப்பிடிப்பேன்"...என்கிருன் ஸ்கூல்.

"என்ன செய்தால் என்ன? அவன் தலையில் அல்லவா கிரீடம் இருக்கும்?" என்று கேட்கிருர் பிஷப்.

" என் வாளைக்கொண்டு கிரீடத்தை பெயர்த்துத் தள்ளுவேன்?"

" தலையில் உறுதியாக இருந்தாலோ?"

"கடவுளோ சாத்தானே - யார் துணையேனும் கிடைக்கட்டும்? கிரீடத்துடன் தலையைக் கொய்துவிடுவேன்" என்று சொல்லி விட்டு போகிருன்.

2

பிஷப் நிக்கலாஸுக்கு காலன் வந்துவிட்டான், உயிர் அங்கோ இங்கோ என்று ஊசலாடு

கிறது. வாழ்விலே செய்த வேலை பூர்த்தியாக வில்லை. விஷ வித்தை பூர்ணமாக உழுது பயிரிட வில்லை. அதற்கு முன் காலன் வந்துவிட்டான். வைத்தியன் கைவிட்டு விட்டான். உடம்பு நைந்துவிட்டது. நிற்கவும் ஜீவனில்லை. அவரு டைய ஆத்மா நல்ல கதியடைவதற்காக, பாபங் கள் மன்னிக்கப் பெறுவதற்காக கோவிலில் ஓயாத பிரார்த்தனை நடக்கிறது. தூங்கி விழா மல், மந்திரத்தை விழுங்காமல் பிரார்த்தனை செய்ய வேண்டும் என்று உத்தரவு போடுகிறார். பிஷப்புக்கு அந்திமதசை அணுகிவிட்டது என்று மன்னனுக்கும் ஸ்கூலுக்கும் ஆள் அனுப்பியாகி விட்டது. மன்னனும் சீக்கிரத்தில் வந்து சேரு வார் என்ற செய்தி வந்துவிட்டது.

பிஷப்புக்கு அவகாசம் குறுகுகிறது; செய்ய வேண்டிய வேலைகளை சீக்கிரம் செய்து முடித்து விட விரும்புகிறார். இந்த உடல் அழிந்துவிட் டால் என்ன? குழப்பத்தையும் கலகத்தையும் சந்தேகத்தையும் செழித்து வளரும்படி செய்ய விஷ வித்துக்களை பயிரிட்டு விட்டுச் சென்றால் யார் தலைதூக்கி நிற்க முடியும். நான் செத்தா லும், யாவரும் என் அடிமைகளாக, என் கைப் பாவைகளாக நான் விரித்த வலையில் சிக்கி உழலு வார்கள். உடம்பில் பலம் இருந்தால் போதுமா; ரத்தத்தில் பாத்யதை இருந்தால் போதுமா? சிற்றரசர்கள் சம்மதம் பெற்றுவிட்டால் போதுமா? உண்மையில் நார்வே என் காலடி

யில் கிடக்க வேண்டும். நான் செத்த பின்பும் என் காலடியிலேயே எழுந்திருக்க முடியாமல் கிடக்க வேண்டும்.

இப்படியாக எண்ணமிட்டு காலன் வரவை எதிர்பார்த்து தமது சூழ்ச்சி வலையில் புதுப் பின்னல்களைப் போட்டுக்கொண்டிருந்தார்.

அந்தச்சமயத்தில், இங்கா வருகிருள். நாட்டைவிட்டு ஓடிப்போன பாதிரி கொடுத்து விட்ட கடிதம், ஹாக்கான் உண்மையான வாரிசா என்பதை தீர்மானிக்கும் கடிதம், அதை எடுத்துக்கொண்டு வருகிருள். அவளுக்கு அந்தக் கடிதத்தில் என்னவிருக்கிறது என்று தெரியாது. பிஷப் வசம் கொடுக்கிருள். மகனை தூரத்திலிருந்து பார்த்துவிட்டுப் போக ஒரு தூண் மறைவில் நிற்கிருள். மகன்பேரில் அவ்வளவு ஆசை. மகனுனுலும் மன்னன் உத்தரவு அல்லவா? மறைந்து நின்றே பார்க்க வேண்டியிருக்கிறது.

இவள் சென்றதும் ஸ்கூல் வந்து சேருகிருன். பிஷப் சாகுமுன் கடிதத்தைக் கண்டுபிடிக்க வேண்டும் என்றுதான் அவனுக்கு ஆவல்.

அவன் ஆசையை வளர்க்கிருர் பிஷப் நிக்கலாஸ். அதை எங்கே கண்டுபிடிக்க முடியும் என்று அவருக்கு தெரிந்துவிட்டதாம்.

"எங்கே. எங்கே." என்று துடிக்கிருன் ஸ்கூல்.

அதிருக்கட்டும். நீ எனக்கு ஒரு காரியம் செய்வாயோ, என் மனசு ஆற வேண்டும். அதோ அந்த மேஜையில் இருக்கிறதே, அந்தக் கடிதத்தை யெடுத்துக்கொள்; - எனது வேண்டுகோளை நிறைவேற்றுவாயா; - நிச்சயமாக, அப்படியானுல் அந்தக் கடிதத்தில் என்னுடைய எதிரிகளின் பெயர் விவரம் இருக்கிறது; நீ அவர்களை கருவறுத்து வஞ்சம் தீர்க்க வேண்டும்; அப்போதுதான் எனது ஆத்மா சாந்தியடையும் என்கிருர்.

"ஆகட்டும், ஆகட்டும்" என்று அந்தக் கடிதத்தை கையில் எடுத்துக்கொண்டு சத்தியம் செய்துவிட்டு, "அந்த ரகசியக் கடிதம் அது எங்கே?" என்று பதைக்கிருன்.

"மன்னன் அதோ வருகிருன்; முதலில் ஜாப்தாவை மறைத்து வைத்துக்கொள்;-அரசே எனது அந்திமக் கிரியைக்கு உம்மை மனமாற வரவேற்கிறேன்" என்று உள்நுழைந்த ஹாக்கானை வரவேற்கிருன்.

மன்னனும் வந்துவிட்டான்; நிக்கலஸோ இப்பவோ, இன்னும் சில விநாடியிலோ; நெருப்பில் கால் வைத்து நிற்பவன்போல் பதைக்கிருன் ஸ்கூல்.

“ உயிருள்ளவரை தாங்கள் எனக்கு பலத்த எதிரியாக நின்றீர்; நான் அதையெல்லாம் மன்னிக்கிறேன்; மறந்துவிட்டேன், மரணம் பழைய குரோதங்களை போக்குகிறது” என்கிறான் ஹாக்கான் -

“மன்னன் கருணை. என் ஆத்மா குளிர்ந்தது” என்று பாராட்டுகிறார் பிஷப்.

“மன்னிப்பை கோரி அழைப்பதுபோல், ஏன் இதை ஏற்பாடு செய்தீர்கள்?” என்கிறான் ஹாக்கான்.

“ஏற்பாடா? என்ன அது?” என்கிறார் பிஷப்.

“மன்னன் என்னைக் குறிப்பிடுகிறார். நான் இங்கு ஆஸ்லோவுக்குள் காலடி வைத்த இந்த நிமிஷம்வரை தங்கள்வரவு எனக்குத்தெரியாது” என்கிறான் ஸ்கூல்.

“நாங்கள் இருவரும் தூரத்தில் இருந்தால் தான் எங்கள் நட்பு தழைக்கும்; ஆகையால், கடவுள் பாதத்தை அடைவீராக” என்று பிஷப்பை வாழ்த்திவிட்டு புறப்படுகிறான்,

“மன்னு போகாதே நில்; பிஷப் நிக்கலாஸ் தனது கடைசி வார்த்தையை உச்சரித்து முடிக்குமுன் நீ இந்த அறையைவிட்டு வெளியே போகக்கூடாது” என்கிறார் பிஷப்.

ஹாக்கானுக்கு இது ஏதோ பெரிய சூழ்ச்சி என்ற சந்தேகம். "தகுந்த பரிவாரத்துடன் ஏற்பாடாக வந்திருப்பதுபோல் தெரிகிறதே" என்று உடைவாளில் கை வைக்கிறான்.

"கடவுள் சாட்சியாகச் சொல்லுகிறேன்; எனக்கு ஒன்றுமே தெரியாது" என்று பதில் கொடுக்கிறான் ஸ்கூல்.

"என் வாக்கின் சக்தி உங்களை இங்கிருந்து நகரவிடாது; நான் சாகப்போகிறேன். ஆமாம், சாகத்தான் போகிறேன். நானே சவச்சடங்கில் என்னைப்பற்றி சொல்லவேண்டிய வார்த்தைகளை சொல்லிவிடுகிறேன். ஆமாம், கண் மங்குகிறது. நீங்கள் இருவரும் நிற்பதுகூட தெரியவில்லை. என் வாழ்வில் நடந்தவைகள் யாவும் என் கண் முன் மறுபடியும் நடக்கிறது. அரசே கேள். நான் வாலிபத்தில் அதிகாரத்துக்கு ஆசைப் பட்டேன். உலகத்தைக் கட்டியாள விரும்பி னேன். ஆனால் போர்க்களத்துக்கு துணிந்து செல்ல எனக்கு தெம்பு வரவில்லை. ரத்தத்தைக் கண்டதும் குலை நடுக்கம் எடுத்தது. நான் அரசு பதவி வகித்திருந்தால் தெய்வ சாம்ராஜ்யத்தை பெருக்கி இருப்பேன். ஆனால் என் ஆசைக்கு குறுக்கே தெய்வமே தடுத்துநின்றது. உலகத்தில் எனக்குமேல் பெரியவன் இருப்பதைக்காண எனக்குப் பொறுக்கவில்லை. மனசிலே அதிகார வேட்கையும் காமக் கனலும் வாட்டியது. வாள் முனையில் வெற்றிப்பாதை வகுக்க விரும்பினேன்.

எனக்கு இப்பொழுது வயது எண்பதுக்கு மேலாகிவிட்டது. ஆனால் இன்னும் மனதில் கொதிப்பு அடங்கவில்லை. பிறப்பிலிருந்தே எனக்கு சக்தி இல்லாது போய்விட்டது. நான் உலகை வெறுத்து மடாலயத்துக்குள் புகுந்ததற்கு அதுதான் காரணம். பாத்திரியானேன். நான் துறவி. நான் பாதிரி - என்ன வேடிக்கை. நான் வலுவற்றவன், பாதிமனிதன், இருந்தாலும் வாழ்வில் தெம்புடன் பிறந்தவர்கள் செய்ய வேண்டியதை, மேலுரை சக்திகள் என்னிடமும் எதிர்பார்த்தன. கேட்டன· தெய்வத்தின் இப்படிப்பட்ட கோரிக்கைகள் நியாயம் என்று நினைத்த நேரங்களும் உண்டு. தெய்வ ஆக்ஞைக்குப் பயந்து நடுநடுங்கிக்கொண்டுதான் எனது மரணப் படுக்கையில் கிடந்ததும் உண்டு. ஆனால் இப்போது என் மனம் உறுதிப்பட்டுவிட்டது. நான் குற்றவாளியல்ல. எனக்குத் தெம்பைக் கொடுக்காதது யாருடைய குற்றம். அந்தத் தெய்வத்தைக் குற்றம் சாட்டி நிற்கிறேன் நான்.........என்று ஆவேசத்துடன் பேசுகிறார் பிஷப் நிக்கலாஸ்.

'அந்தக் கடிதம். அந்தக் கடிதம்' என்று அங்கலாய்க்கிறான் ஸ்கூல்.

"தெய்வத்தை தூற்ற வேண்டாம். பணிந்து பேசும்" என்கிறான் மன்னன்.

'ஆத்ம பண்பாடு ஒவ்வொருவனுடைய தனி விவகாரம், மன்னா ஜாக்ரதை. தெய்வமே என்னை

எதிர்த்து நின்றதுபோல, சகல சக்திகளேயும் ஏந்தி உமக்கு வைரியாக ஒருவன் நிற்கிருன். தலை கழுத்தோடு நிற்கும்வரை அவன் உம்மை எதிர்த்தே போராடுவான். அவனுடன் அதிகாரத்தை பகிர்ந்துகொள்; நார்வேக்கு இரண்டு அரசர்கள் இருக்கட்டும். இல்லாவிட்டால் கல்லறையில் எனக்கு நிம்மதி இராது. அலகையாகவந்து உங்களே வாட்டுவேன், மன்னு சம்மதிப்பாயா?"

'அதிகாரத்தில் நான் ஒரு இம்மிகூட விடமாட்டேன்' என்கிருன் மன்னன். பணியாளனேக் கூப்பிடுகிருர் பிஷப். "எனது ஜீவிய பர்ப மன்னிப்பு பிரார்த்தனே நடந்துவிட்டதா, இன்றைய இரவு நான் இழைக்கக்கூடிய பாபத்துக்கு இன்னும் ஏழு முறை பிரார்த்தனே செய்யச்சொல்' என்று உத்தரவிடுகிருர் பிஷப்.

மறுபடியும் கடிதத்தை ஞாபகப்படுத்துகிருன், ஸ்கூல்,

"அந்தக் கடிதப்படி அவனே நியாயமான வார்சாஞல்..." என்று கேட்கிருர் பிஷப்.

'பணிந்து அவருக்கு ஆட்பட்டுநடப்பேன்' என்கிருன். ஸ்கூல்.

'ஸ்கூல், உன்னேப்போல எனக்கும் மனசு இளகுகிறது...

'அந்தக் கடிதம்.........'

'இரு இரு, விரோதிகளைப் பற்றி நான் ஒரு பட்டியல் கொடுத்தேனே, நீ அதிகாரத்தை விட தயாராக இருப்பதுபோல நானும் என் எதிரிகளை மன்னிக்க ஆசைப்படுகிறேன், அந்தப் பட்டியலை இந்த நெருப்பில் போட்டு விடு என்கிறார் பிஷப்.

ஸ்கூல் அந்தப்பட்டியலை நெருப்பில் போட்டு விடுகிறான். 'இதோ எரிகிறது பாரும். அந்தக் கடிதம். ஆயிரக்கணக்கானோர் வாழ்வு அதிலே சிக்கிக்கிடக்கிறது.' என்று துடிக்கிறான் ஸ்கூல்.

'ஆயிரக்கணக்கானோர் வாழ்வு ஐயோ கண் மங்குகிறதே, மூச்சடைக்கிறதே' என்று ஓலமிடு கிறார் பிஷப்.

'பிஷப்புக்கு அந்திம தசை நெருங்கிவிட் டது' என்று கூவுகிறான் மன்னன். பாதிரியாரின் பணியாட்கள் ஓடி வருகின்றனர்.

'அந்தக் கடிதம்' என்று பிஷப்பை உலுக்கு கிறான் ஸ்கூல்.

'இன்னும் ஏழு பிரார்த்தனை வில்லியம்' என்று கூவுகிறார் பிஷப்.

'அந்தக் கடிதம். கடிதம்'

பிஷப் நிக்கலாஸ் முகத்தில் சாக்காடு தொட்டுவிட்டது. முகம் பொலிவிழக்கிறது· சாக்காட்டுடன் போராடுவதுடன் புன்சிரிப்பு

மாறுமல், 'ஸ்கூல், நீ எரித்ததுதான் அந்தக் கடிதம்' என்று சொல்லிவிட்டு விழுந்து மடி கிருர்.

'ஐயோ தெய்வமே,' என்ற கூப்பாட்டுடன் ஸ்கூல் முகத்தை பொத்திக்கொள்ளுகிருன்.

பிஷப் மாண்டுவிட்டார். அவர் வைத்த நெருப்பு மடியவில்லை.

மடாலய சீடர்கள், பணியாட்கள், சாத்தான் வந்து பிஷப் நிக்கலாஸை இழுத்துக்கொண்டு சென்றுவிட்டதாக சொல்லுகிருர்கள்.

## 3

மன்னன் ஹாக்கானுக்கு ஆண் குழந்தை பிறக்கிறது. தொட்ட தொட்ட காரியத்தில் எல்லாம் வெற்றி. வம்சம் மங்காதிருக்க ஆண் குழந்தை, ஸ்கூலுக்கு பொறுக்க முடியவில்லை. கடைசி முறையாக மன்னனிடம் பங்கு கேட்டு சமாதானம் பண்ணிக்கொள்ள முயலுகிருன். சந்திப்பில் இருவருக்குள் பேச்சு வார்த்தைதடிக் கிறது. மன்னனுக்கு நாடு இரண்டு படுவதற்கு விருப்பமில்லை. ஸ்கூலுக்கோ தனக்குமேல் அதி காரம் வகித்து எவரும் இருக்கக்கூடாது என்ற உறுதி.

இரண்டு பேரும் துவந்த யுத்தம் நடத்தி, மிஞ்சுகிறவர்களுக்கு அதிகாரம் மிஞ்சட்டும் என்று கோருகிருன் ஸ்கூல்.

"மனப்பூர்வமான வார்த்தையா"? என்கிறான் மன்னன்.

"எனது வாழ்வில் வேலைக்காக எனது ஆத்மா கடைத்தேறுவதற்காகத்தான் இதைக் கேட்கிறேன்"

"அப்படியானால் உமது ஆத்மா கடைத்தேறாது" என்கிறான் மன்னன்.

"அப்படியானால் சண்டைக்கு தீர்மானமா? என்று கேட்கிறான் ஸ்கூல்.

"நார்வே மக்களை ஒன்றுபடுத்தி நாட்டை வாழ்வுத் துறைப்படுத்துவது என் ஆசை" என்கிறான் மன்னன்.

"நாட்டு மக்களை ஒன்றுபடுத்துவது; யாவருடைய மனசிலும் தாம் யாவரும் ஒன்று என்ற பாவத்தை உண்டுபண்ணுவது! உனக்கு ஏன் இந்த விபரீத புத்தி. அது என் ரத்தத்தைச் சாகடிக்கிறது; மன்னா சாத்தான்தான் இந்த நினைப்பை உனக்கு அனுப்பி இருக்க வேண்டும். மார்பில் கவசம்பூண எனக்கு பலம் இருக்கும் வரை அந்த நினைப்பை நிஜமாக்கவிடமாட்டேன்.

"இந்த ஆசையை நினைப்பை தெய்வம் எனக்குத் தந்தது. பக்தன் ஓலாப் பணித்த கிரீடம் என் தலையிலிருக்கும் வரை அதை நடத்தியே தீருவேன்"

"அப்பொழுது அந்தக் கிரீடம் அங்கிருந்து தரையில் புரளவேண்டியதுதான்"

"யாருக்கு அந்த தெம்பு"

"வேறு எவருமில்லாவிட்டால், நான் நடத்துவேன்"

"நாளைக்கு சபைகூட்டுவித்து, உன்வலுவை வாங்கவேண்டியதுதான்."

"ஹாக்கான், தெய்வத்தை காமியாதே. என்னைப்படுகுழிப் பக்கத்தில் நெருக்காதே."

மன்னன் கோபத்தை அடக்கிக்கொண்டு "போய்விட்டு வாருங்கள். வார்த்தை தடித்தது என்பதை இருவரும் மறந்து விடுவோம்" என்கிறான்.

"மறுமுறை சந்திக்கும்போது, வார்த்தைகள் இதற்குமேல் கொதிக்கும்" என்று சொல்லிக்கொண்டே வெளியேறுகிறான்.

ஸ்கூல் சென்று சற்று நேரம் கழித்து ஸ்கூல் கோஷ்டியைச் சேர்ந்த சிற்றரசன் ஒருவன் வருகிறான். ஸ்கூல் கட்சியை வெறுத்து மன்னனுடன் சேர்ந்துகொள்ள விரும்புகிறான். அதற்கு அவன் சொல்லும் காரணம் ஹாக்கானை திடுக்கிட வைக்கிறது.

அமைதியாக உறங்கிக்கொண்டிருந்த மனைவி மார்க்கெரட்டை தட்டி எழுப்புகிறான்.

'என்ன?' என்று கேட்டுக்கொண்டு வெளியே வருகிறாள்.

'இப்பொழுது நார்வேயில் இரண்டு அரசர்கள்? என்கிறான் ஹாக்கான்.

'இரண்டு அரசர்கள்—அப்பா எங்கே?' என்று கேட்கிறாள் மார்கெரட்.

'கப்பலிலேறி தன்னை அரசன் என்று பிரகடனம் செய்துகொண்டு முடிசூட்டிக்கொள்ள நிடராஸ் நகரை நோக்கிபிரயாணப்பட்டு விட்டார்' என்கிறான் மன்னன்.

'தெய்வமே.' என்று ஏங்கிக்கொண்டு அவன் காலடியில் விழுகிறாள்.

'தேசத்தில் இரண்டு மன்னர்கள்.'

'ஒன்று என் கணவர், மற்றவன் என் தகப்பன்' என்று எதிரொலிக்கிறாள் மார்கரெட்.

"நான் என்ன செய்யவேண்டும். நினைத்துப் பார்த்து விவேகத்துடன் யோசனை சொல். நான் மலைப்பாதை வழியாகச் சென்று அவர் முடிசூட்டிக்கொள்ளுவதை தடுக்கட்டுமா? உன் தகப்பனார் நிடராஸுக்குப் போகுமுன் அவரை எப்படிக் கொல்லுவது.

'ஹாக்கான், ஹாக்கான்.'

'அவரைக் கொல்லுவதற்கு லேசான தந்திரம் எதுவும் சொல்லேன்?'

'அவர் என் தகப்பனார் என்பதை அடியோடு மறந்து விட்டீர்களா?'

'உன் தகப்பன், ஆம். ஆம். அதை மறந்து விட்டேன்; அதற்கு நீ என்ன செய்வாய். ஸ்கூல்தான் எனக்கு படு வைரியாகிவிட்டார், தெய்வமே. தெய்வமே என்னை ஏன் இப்படி அடிக்கிறாய். என்னை, பாவம் செய்யாத என்னை. யார் அங்கே இந்த அர்த்த ராத்திரியில் கதவைத் தட்டுகிறது'.

'குளிரில் கிடந்து செத்துமடியும் ஒருத்தி.' என்று வெளியிலிருந்து ஒரு குரல் கேட்கிறது.

'அம்மா' என்று அலறிக்கொண்டு கதவைக் திறக்கிறான், ஹாக்கன்.

'என் தாய்! மகன் வீட்டு வாசலில் நாய்போல் காத்துக்கிடப்பது?, கடவுள் என்னை தண்டிக்கிறார் என்ற சந்தேகம் வேறு எனக்கு.'

'ஹாக்கான், குழந்தாய், தெய்வம் உன்னை ரக்ஷிக்குமாக.'

"கடமையில் வழுவாதிருக்க பாசத்தை துறந்தேன். பாசம் தரும் உங்களிருவரையும் என் இதயத்திற்கு வெளியே தாளிட்டேன்!"

“ஹாக்கான்! கடைசியாக உன் இதயத்தில் எனக்கும் இடம் உண்டா?” என்று மகிழ்ச்சியுடன் கேட்கிறாள் மார்க்கரெட்.

அதற்குள் மன்னன் பரிவாரத்திலுள்ள சிற்றரசன் ஸ்கூலின் புரட்சி பற்றிய செய்தியுடன் ஓடி வருகிறான்.

“பதறாதே, நார்வேயில் அரசர் இரண்டு இருந்தாலும் உயர இருப்பவன் ஒருவன் தான். அவன் சிக்கலைத் தீர்த்து வைப்பான்” என்று ஆற்றுகிறான் மன்னன்.

## 4

பிஷப் நிக்கலாஸ் இட்ட தீ நார்வேயில் நன்றாகப் பற்றிக்கொண்டது. பாதிரியார் விரும்பியபடி அவர் உருட்டிவிட்ட விஷம சக்கரத்தின் வேகம் கைக்கடங்காதுபோல் சுழல்கிறது. ஸ்கூல் தலையில் கிரீடம் ஏறிவிட்டது. ஆஸ்லோ அரண்மனை அத்தாணி மண்டபத்தில் கோலாகலம், ஆனால் ஸ்கூல் மனசில் மட்டும் வலுவு குடியேறவில்லை. அடிக்கடி மனசிலே சந்தேகம். தன் பணத்தைப்பற்றி நம்பிக்கை குறைவு. “நம்ப முடியாதது நடந்துவிட்டது. ஹாக்கான் தோற்றான், நான் வென்று விட்டேன்; வெற்றியின் சாயையில் அந்தரங்க பீதி ஒளிந்து கிடக்கிறது. உரிமை பெற்றிருந்தால், வெல்லும் சக்தி அதனுடன் வராது. மனசிலே நோய், நோய். தெய்வமே நியாயம் ஏன் என் கட்சியில் இருக்கக்கூடாது?

தெய்வம் எனக்கு வெற்றியைக் கொடுத்தபோது நியாயமும் என் கட்சியில்தான் இருக்கிறது என்பதை உறுதி கூறுவது போலில்லையா? "நார்வே இதுவரை வெற்றரசாக இருந்தது. இனிமேல், ஜனசக்தியின் சம்மதமும் பலமும் பெற்ற ராஜாங்கமாகிவிடும்" என்று ஹாக்கான் கர்ஜித்தபோது அரசபதவி அவனுக்கே உரிமைப் பட்டதுபோல என் கண்களுக்குப் பட்டது. ஒருவேளை அவனுடைய விபரீத வார்த்தைகளில் தெய்வ அபிஷ்டம் தொனித்ததோ, தெய்வத்தின் வாக்கை பரப்ப வந்தவனோ அவன்" இப்படி அல்லாடுகிறது ஸ்கூல் மனம். பக்தன் ஓலாப் விக்கிரகத்தின் முன்பு முடிசூட்டல் நடக்காதது கெட்ட சகுனம் என்று ஜனங்கள் பேசிக் கொள்ளுகிறார்கள் என்ற வார்த்தைவேறு அவனுக்கு பயத்தைக் கொடுக்கிறது.

யுத்தம் நாலா திசையிலும் மூண்டுவிட்டது என்ற செய்தி அடிக்கடி வந்து குவிகிறது. தன் பலம் படிப்படியாக குன்றிவிடுமோ என்று பயப் படுகிறான்.

மனம் அல்லாடிக்கொண்டிருக்கையில்தனது ஆஸ்தான கவியை கூப்பிட்டழைக்கிறான். ஜட் டாகீர் பிறப்பிலே கவி. அவன் வாக்கில் இசை, தானே வந்து தவழ்ந்து விளையாடும்.

'ஜட்டகீர், நீ எப்படிக் கவியானாய், யாரிடம் பாடக் கற்றுகொண்டாய்?' என்று கேட்கிறான் ஸ்கூல்.

'அரசே, கற்றுக் கவியாக முடியாது' என்கிருன் ஜட்டாகீர்.

'அந்தப் பரிசு உனக்கு எப்படி கிடைத்தது?'

எனக்கு துன்பம் என்ற பரிசு கிடைக்தது, என்னைக் கவியாக்கியது.'

'பாடுவோருக்கு துன்பப் பரிசுதான் தேவையோ?'

'அரசே எனக்கு அது தேவையாக இருந்தது, சிலருக்கு பக்தி, வேறுசிலருக்கு போகம், மற்றும் சிலருக்கு சந்தேகபுத்தி...

'சந்தேக புத்தியுமா?' என்று ஆச்சர்யப்படுகிருன் ஸ்கூல்.

ஆனல் சந்தேக புத்தியுள்ளவனுக்கு நெஞ்சிலும் புத்தியிலும் இடம் இருக்க வேண்டும்.

'அதாவது...'

'அதாவது தனக்குள்ள சந்தேகத்தையே சந்தேகிக்கும் சக்தி.'

'அப்படியென்ருல் மரணம்தான்.'

'அல்ல', மரணத்தைவிட படுமோசம். இருளும் ஒளியும் அற்ற கருக்கல்.'

'ஜட்டாகீர், இன்னும் உன் மனசில் நீ பாடாத பாட்டுக்கள் பல இருக்குமோ?'

'அரசே பிறக்காத பாட்டுகள் பல உண்டு, அவை ஒவ்வொன்ருய் பிறக்கின்றன.'

'இருக்கட்டும். நான் உன்னை கொன்று விட்டால், பிறக்காத உனது எண்ணங்கள் உன்னுடன் மடிந்துவிடுமா?' என்று கேட்கிருன் ஸ்கூல்.

'அழகான நினைப்பை கொல்லுவது மகா பாவம்.'

'பாபத்தைப்பற்றி கேட்கவில்லை, முடியுமா?'

'அரசே, நானறியேன்.'

'வேறு ஒரு கவி ஒருவன் அழகான கருத்து ஒன்றை உனக்கு சொல்லுகிருன் என்று வைத்துக்கொள்; அவனைக் கொன்று அதைத்திருட நீ ஆசைப்படுவாயா?'

'அரசே, நான் மலடு அல்ல, எனக்கும் நினைவுக் குழந்தைகள் பலவுண்டு. வேற்ெருருவர் குழந்தைக்கு ஆசைப்படும் அவசியம் எனக்கில்லை.'

இம்மாதிரியான கவியின் வார்த்தைகள் எல்லாம் ஸ்கூலுக்கு அவனது திறமையின்மையை இடித்துக் காட்டுவன போலிருக்கிறது. சோர்வு வலுக்கிறது. இந்த நிலையில் தனக்கு ஆண் மகவு இல்லாதது பெரும் குறையாக, பலக்குறைவாக மனசை வாட்டுகிறது புது

மன்னன் ஸ்கூலுக்கு. முன்பு எப்போதோ தன் ஆசையின் விளைவால் பிறந்த பையன் ஒருவன் எதிர் வருகிறான். நீரில் உயிருக்கு அல்லாடுகிற வன் கை சருகையும் எட்டிப் பிடிக்குமல்லவா? அவனைத் தன் மகனாக பட்டத்து இளவரசாக ஏற்று அவனை ஊன்று கோலாக நம்புகிறான் ஸ்கூல். அவன் பெயர் பீட்டர், தகப்பன் பேரில் மாறாத பக்தி, தகப்பன் சொல்லுவதே வேத வாக்கு, அவன் ஆசையை நிறைவேற்ற செய்யும் எந்தப்பாபமும் புண்ணியமாகத் தோற்றுகிறது அவனுக்கு. தகப்பனுருடைய ஆசையைப் பூர்த்தி செய்ய, பாதிரிகள், மதகுரு முதலியோருடைய சாபங்களையும் பொருட்படுத்தாமல், பக்தன் ஓலாப் விக்கிரகத்தை முதுகில் தூக்கிக்கொண்டு வந்துவிடுகிறான். இந்த அடாத செயலைக்கண்டு ஸ்கூல் மனம் பிரமிக்கிறது. மகனுடை பக்தி ஆவேசத்தைக்கண்டு பயப்படுகிறான். போரின் கொழுந்து நாலா திசையிலும் படர்கிறது. ஸ்கூல் தன்னைச்சுற்றிலும் எரியும் தீயைக்கண்டு பயந்துவிடுகிறான். தன்னால் கொழுந்விட்டு எரி யும் தீயைக் கண்டு நடுநடுங்குகிறான். போரின் போக்கு இவனுடைய நலத்துக்கு மாறாகத் திரும்புகிறது. ஹாக்கான் வெற்றி வீரனாக மோதிப் புடைத்துக்கொண்டு வருகிறான். ஸ்கூல் தேவாலயத்தில் புகுந்து உயிர் தப்ப ஓடுகிறான்.

5

எக்ஸஸீட்டர் கன்னியாஸ்திரிகள் மடத் தில், ஹாக்கான் தன்னுடைய குழந்தையையும்

மனைவியையும் அனுப்பிவிட்டு, வெற்றிப் படை யுடன் வெகுண்டு வருகிறான்.

மிரண்டு ஓடிவரும் ஸ்கூலும் அதற்குள் தஞ்சம் புக ஓடி வருகிறான். உள்ளே அவன் மனைவி, மகன், யாவரும் இருக்கின்றனர். வெளி யே வந்து நின்று கதவைத் தட்டுகிறான்.

'யார் கதவைத் தட்டுகிறது' என்று கேட் கிறான் மார்க்கெரட்டுடன் துணையாக வந்த மெய்க்காவலன்.

'ஒரு அரசன்' என்று குரல் கொடுக்கிறான் ஸ்கூல்.

'ஸ்கூலா?'

'மன்னன் ஸ்கூலா?' என்று கேட்கிறாள் மனைவி.

'அப்பா' என்று கூப்பிடுகிறாள் மார்கெரட்.

'கதவைத் திற, கதவைத் திற,'

"துரோகிகளுக்கு உள்ளே இடமில்லை" என்கிறான் ராணியின் மெய்க்காவலன்.

"அது ஏன் அப்பா" என்று அலறுகிறாள் ராணி.

"தேவாலயத்தில் இடம் கொடுக்க மறுத்தால் தெய்வசாபம் சேரும்" என்கிறாள் ஸ்கூலினுடைய மனைவி.

"தெய்வத்தின் பெயரால்" என்று கதவு திறக்கப்படுகிறது.

உள்ளே சோர்ந்துவந்த ஸ்கூல், உள்ளம் நொடித்துவிடுகிறான். ஹாக்கான் வந்ததும் மன்னிப்புக் கேட்கவும் தயாராகி விடுகிறான்.

ஸ்கூலுக்கு மனசிலே சோர்வு, காலிலே தளர்ச்சி.

ஸ்கூலின் வார்சு, அரசன் ஹாக்கானுடைய குழந்தையைக் கொன்றுவிட்டால், அவன் வலு ஒடிந்து விடும் என்ற நம்பிக்கையில், அசுரன் போல் தேடி வருகிறான். மதிலேறி உள்ளே நுழைய முயலுகிறான். ஜனக்கும்பல் அவனைப் பார்த்து விடுகிறது. ஓலாப் சிலையைப் பங்கப் படுத்தியவனல்லவோ! ஜனங்கள் கொந்தளித்துக் கொண்டு கொல்ல தயாராகிறார்கள்.

ஆனால் அவன் வெறியனாக குழந்தையைக் கொல்லும் ஏகநோக்கத்துடன் உள்ளே குதித்து விடுகிறான்.

வெளியே ஜனக்கூட்டம், கதவை உடைக்க முயலுகிறது.

வெளியே இவர்களை விரட்டுவதுதான் நல்லது. தஞ்சம் என்று வந்தவனையும், அவனுக்காக உழலும் வெறியனையும் எப்படி தெய்வ மண்ணிலிருந்து போ என்று சொல்லுவது?

ஸ்கூல் திடீரென்று தீர்மானிக்கிறன்.

"கதவைத் திறவுங்கள்; நாங்கள் வெளியே போகிறோம், சிலர் வாழப் பிறந்தவர்கள், சிலர் சாகப் பிறந்தவர்கள், தெய்வம் வழிகாட்டிச் செல்லாத பாதையிலேயே என் மனம் செல்கிறது, அதனால்தான் இன்றுவரை எனக்கு வழி துலங்கவில்லை. மன்னன் ஹாக்கானுக்காக நான் காத்திருக்க மாட்டேன்" என்று சொல்லிக்கொண்டு வெளியே தனது பட்டத்து இளவரசுடன் செல்லுகிறன்.

வெளியே ஒருநொடி கத்திகளின் சலசலப்பு; அவ்வளவுதான். இருவரும் பிணமாகிவிட்டனர்.

மன்னன் ஹாக்கானும் பிரவேசிக்கிறன்.

"அரசே இனி உனக்கு பகைவர்களில்லை" என்கிறது பல குரல்கள்.

"அவர் உடம்பு என்னை வழி மறிக்கிறது" என்கிறன் மன்னன்.

"தாண்டிச்செல்ல வேண்டும்"

“தெய்வத்தின் கட்டளை அதுவானால், அப்படியே ஆகட்டும்” என்று தாண்டுகிறான்.

“இனி நார்வேயில் அமைதி, தேசத்தின் படுதுரோகி அதோ உம்காலடியில் கிடக்கிறான்” என்கிறான் ஒரு சிற்றரசன்.

“அப்படியல்ல, அவன் வாழ்வே ஒரு அதிசயம். கடவுள் அவனை தன் சக்களத்தி பிள்ளையாக பாவித்து நடத்தியது.”

★

அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்

## விரைவில் வெளிவரும்

## "புனர் ஜன்மம்"—சிறந்த ருஷிய நாவல்

டால்ஸ்டாய் எழுதியது

*தமிழில் தருபவர்:* N. தங்கவேலு. பி. ஏ

விலை ரூ. 7-8-0

### EXCELSIOR PUBLICATIONS

East Main Street, Pudukottai

---

## "நான் கண்ட சுபாஷ்"

கவிஞர் டிலிப் குமார் ராய் எழுதியது

*தமிழில் தருபவர்:* சு. நடராஜன்

விலை ரூ. 5-0-0

### STAR PUBLICATIONS

Palakarai, Trichinopoly